ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1—12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-௵ ஆனி-௴ 27-௳ (10—7—1932) | மலர் 11.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

தோழர். ம. சிங்காரவேலு பி.ஏ., பி.எல்.,
அவர்கள் எழுதிய

"கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல் கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். அதிக பக்கங்கள்; குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள். ஒருவாரத்தில் கிடைக்கும்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,

குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
5.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
6.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
7.	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
8.	மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O
கோலார் தங்கவயல் (S. I.)

முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா ௸. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

"சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
„ வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலுபி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

Read.
The 'Citizen'

and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

கோஷாயி பாதுஷா மாத்திரை.

விபசாரத்தினால் ஜெனித்த சர்வரோக சங்காரணி.

Dr. T. K. V.
Chalam.

ஆண், பெண் அனுபவிக்க அனுபவத்தில் முதன்மை பெற்றது. 7 நாள் 14 மாத்திரை உபயோகிப்பவர்களுக்கு, விபசார நடத்தையில் ஜெனித்த சர்வ ரோகங்களையும் சங்கரித்து திடதைரிய தேஜஸ்ரூபியாய் திகழச்செய்யும் அன்பு தொண்டன்.

கோஷாயி பாதுஷா மாத்திரை 14 கொண்ட சீசா 1க்கு ரூ. 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு. உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

உதவி டாக்டர், T. K. V. Chalam } டாக்டர் B. A. எதிராஜ். (காலரா வைரி)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ஆ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

கனம். முத்தையா செட்டியார் அவர்கட்கு
எங்கள் விண்ணப்பம்.

[கைவல்யம்]

எல்லாதானத்தையும் விடச் சிறந்தது வித்தியாதானம். அதில் தென்னாட்டில் விசேஷப்பட்டவர் தங்கள் தந்தையாவர். உங்கள் தந்தையால் சிதம்பரத்திலேற்பட்டிருக்கும் மீனாட்சி கலாசாலை இந்து சமய தத்துவ சாஸ்திரவகுப்பில் பார்ப்பாரப்பிள்ளைகளல்லாத பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளுவதில்லையாம். சேர்த்துக்கொள்ளாமலிருப்பதற்குள்ள காரணங்கள் நியாயத்தில், உண்மையில், சத்தியத்தில், அறிவில் ஒத்துக்கொள்ளக்கூடியதாக வில்லையே. பார்ப்பாரப்பிள்ளைகளைப்போல மற்ற இந்து சமயப்பிள்ளைகளையும் இந்துசமய சாஸ்திர வகுப்பில் சேர்த்துக்கொள்ளுவது கடவுளுக்கு, சமயத்திற்கு, சாஸ்திரத்திற்கு, அறிவிற்கு, ராஜாங்கத்திற்கு, நீதிக்கு விரோதமானதா? அப்படியாயின் அவையனைத்தும் குற்றமுடையதாகாதோ? பாவம், நரகம்வந்துவிடுமா? பொருள், தேகம், பிரக்யாதி இவைகள் நஷ்டமடைந்துவிடுமோ? அப்படியாயின் இந்துமத தத்துவ சாஸ்திரங்களின் அமைப்பின் பெருமைக்குப்பங்கமல்லவா? என்கிற விஷயங்களை உங்கள் ஞாபகத்திற்குக்கொண்டுவந்து ஆலோனைக்குட்படுத்தி உண்மையும், சத்தியமும் கலாசாலையில் விளங்கிப் பொதுலோகவிதியும் பொதுதெய்வவிதியும் நமது நாட்டிலும் கண்டு தெளிவான யோசனையும் பெருந்தகையையுடைய உள்ளமும் உடையவர்களாய், தருமத்தின் உண்மைக்கு வாய்க்கால்களாக உள்ளவர்களின் உள்ளத்தில் நீங்களிருக்கவே தங்களுக்கு இந்த விண்ணப்பம் எழுதப்படுகிறது.

ஏழைகளுக்கு விண்ணம்பம்தவிர வேறுவழியில்லை. பணக்காரர்களுக்குக்கண்ணில்லை, காதுதானென்கிறார்கள். ஸ்திரீ, கொடி, ராஜா இவர்கள், பக்கத்திலுள்ளவர்களின் வார்த்தையைத்தான் கேட்பார்களாம் என்பது முன்னுள்ளவர் வார்த்தை எங்களுக்குத்தங்கள் கண்ணுகிடைத்தாலும் காது கிடைக்காது. தாங்களோ சாஸ்திரப்பண்டிதர்கள, பிரபுக்கள், உத்தியோகஸ்தர்கள், ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்கள், மந்திரிகள், இவர்கள் கூட்டத்திலிருப்பவர். எங்கள் விண்ணப்பத்தின் விஷயத்திற்கு கர்த்தா, உங்கள்குருஸ்தானங்கள். அவர்கள் கை உங்களுடைய கையுடன் கோர்க்கப்பட்டிருக்கிறது. அவரிதழ்கள் உங்கள் செவிப்புறத்தே இருக்கின்றன. உங்களுடைய மந்திர சபையில் அவர்களுக்கும் ஸ்தானமுண்டு. அவர்களுக்கு உங்கள் சகைத்தின் தனி அறைக்குள் போகக்கூட அதிகாரமுண்டு. உங்கள் நல்லெண்ணத்தையும் பொதுவிதியையும் மாற்றுவதற்குப்பழய ஏட்டையும் செல்லரித்த ஏடுகளையும் காட்டி அதுவே உங்களை உச்சஸ்தானத்திற்குக்கொண்டுபோனதாகவும், இனியும் கொண்டுபோவதாகவும் காட்டுவார்கள்.

மாடமாளிகைகளிலும், சோலைகளிலும், உபவனங்களிலும், குடிசைகளிலும், வயல்களிலும், ருதுக்களின் வரவை காணும்பொருட்டு களிப்புடன் எல்லா ஜனங்களும் காத்திருப்பதுபோலவும், சூரியனும்பிராண வாயுவும் எல்லாஇடத்திலும் நுழைந்து போவதுபோலவும், எல்லாஆத்மாவிலும் விளங்கும் நித்தியவஸ்துவின் தத்துவத்தைப்படிப்பதற்கு எல்லாமாணுக்கர்களும் ஆவலோடு காத்திருப்பார்களென்பதை அறிந்தவர்களின் கூட்டமும், தங்கள் கூட்டத்திலிருக்கலாம். என்றாலும் சந்தை இரைச்சலுக்கு முன்னால் தன்னிரைச்சல் பலனளிக்காதென்றஞ்சினவர்கள் தனக்கு ஆபத்து வந்துவிடுமோஎன்றுபயந்தவர்கள், இதைப்பற்றிக்கவனிக்காத உத்தியோகஸ்தர்கள், பூசைக்குக்குருக்கள், கர்மத்திற்குப்புரோகிதன், பாவத்தைப்பரிகரிக்க குருவிற்குப் பாதகாணிக்கை, புண்ணியத்திற்குப் பார்ப்பாரபோஜனம், மோக்ஷத்திற்கு கோவில் உற்சவங்கள், உலகபோக போக்கிய விர்த்திக்கு சிரார்த்தம், பூசை, நாள், நக்ஷத்திர அனுஷ்டானங்கள் இவைகளால் திருப்திப்பட்டுக்கொண்டிருக்கும் பிறபுக்கள், தன் கூட்டத்தார்பிழைப்பிற்கு உண்மையை மறைப்பவர்கள், தன்ஜாதி உயர்வைக்காப்பாற்றுவதில் கண்ணாயிருப்பவர்கள், தம்மைப்பிறர் வணங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் தம்மை உயரத்தில் அடைத்துக்கொண்டிருப்பவர்கள், மோகிக்கத்தக்க முகஸ்துதிகளையும், தாலாட்டுகளையும் தம்பரிவாரங்களின் வணக்கத்தையும் கேட்டு மகிழும் பணக்காரர்கள், பொருள், அதிகாரம், பயம் இவைகளில் ஊரவந்த மந்திரிகள், உத்தியோகம் வந்தவுடன் கட்சியை விட்டு தெய்வ அருளின் கருணைப்பிரவாகத்தைத் தேக்கிவைத்துக்கொள்ள நினைக்கும் ஜஸ்டிஸ் கட்சிபக்தர்கள், சாஸ்திர நிச்சயத்தைவிட்டு, சமய உண்மையைத்தள்ளி குருக்கள் கட்டுப்பாட்டைப் பாராட்டி நிற்கும்சமயவாதிகள், இவர்கள் சொல்லுவதை விசாரித்தறியும் புத்திஎன்றபடி ஆலோசித்துப் பார்க்காத புத்திமான்கள், உலகப்பொது விதியைஉல்லங்கனம்செய்யும் அறிவையுடையவர்கள், இவர்களால் கோட்டையாகச் சூழப்பட்ட சுவரையும் மீறிஎங்கள் விண்ணப்பத்தைதங்கள் ஆலோசனைக்குக்கொண்டு வருகிறவர்கள் அங்கிருப்பார்களோ இருக்கமாட்டார்களோ நாங்களறியோம். என்றாலும் உண்மையையும் நியாயத்தையும் நம்பிவார்த்தைசொல்லுகிறவர்கள், உண்மைக்குப்பரிந்து பேசுகிறவர்கள், மனிதவாழ்க்கையில் மனிதனுகவிருப்பவர்கள் இவர்களும் தங்களிடையேயிருப்பார்களென்று நினைக்கிறோம். அதனால் பழங்காலந்தொட்டு நம் நாட்டு விதியாகிய பாலைவனப்பாதையிலே சிதருண்டுகிடக்கும் பயனற்ற நல்லெண்ணங்களின் எலும்புகளினூடே இந்தவிண்ணப்பமும் சேர்ந்துவிடாதென்றே நம்புகிறோம்.

சாஸ்திர தர்க்கவாத ஆதாரங்களினால் இந்தவிண்ணப்பத்தை நிறைத்து தங்கள் காலத்தை வீணாக்காமல் எல்லாருக்கும் அர்த்தமாகும் விஷயத்தை அர்த்தமாகும் பாஷையிலேயே சமர்ப்பிக்கிறோம்.

இந்துமத எல்லாப்பிரிவுகளிலும் கடவுள்ஒன்றே என்றும், எல்லா ஜீவர்களின் ஆத்மாவும் ஒன்றேஎன்றும், அந்த ஆத்மாவிலெல்லாம் கடவுள் விளங்குகிறார் என்றும் சொல்லப்படுகின்றன. அப்படியிருக்க கடவுளைப்பற்றியும் ஆத்தமாவைப்பற்றியும் கடவுகளுக்கும் ஆத்மாவுக்குமுள்ள சம்பந்தாசம் பந்தத்தைப்பற்றியும்உள்ள இந்து சமய சாஸ்திரங்களை இந்து சமயத்திலுள்ளவர்களில் சிலர் படிக்கலாம், சிலர் படிக்கப்படாது என்பதற்கு பழைய கால முதற் கொண்டு சொல்லி வரும் காரணங்கள் ஆதாரமற்றது. ஏமாற்று, வஞ்சனை என்பவைகளை பல தடவை எங்களால் சன சமூகத்திற்கு எடுத்து விபரமாகச் சொல்லப் பட்டிருக்கிறது அதிலும் உங்கள் கலாசாலையில் அவ்வித்தியாசமிருக்க எந்த நியாயத்திலுமிடமில்லை.

வேதத்தின் முக்கிய பாகங்களுக்கு ஆரண்யங்கள் என்கிற பெயருண்டு. இவைகளுள் சிறந்த உபநிஷத்துக்கள் அடங்கியிருக்கின்றன. ஆரணயகம் என்ற பதத்திற்கு காட்டில்இயற்றப்பட்ட நூல்கள் என்று பொருள். யாகாதிகர்மங்களை விட்டு, துறவு பூண்டு வனம் சென்று. தமது நாளைத் தபசில் கழிக்கும் குணமுடையோருக்கே குரு சிஷியக் கிரமமாகவனத்தில் உபதேசிகப்படுவது, அதற்கு சுருதி என்றும் சொல்லுவார்கள். உபதேசம் செய்வதைக் காதினால் கேட்பதால் சுருதி என்கிற பெயர் வந்தது. பிராமணத் தன்மையான ஞானத்தையடையக்காட்டிற்குப் போய்பிராமணர்களா யிருக்கும் ரிஷிகளிடம் உபதேசம் பெருவதால் பிராமணனுக்கே உபதேசிக்கப் பட வேண்டுமென்றாயிற்று. அதாவது பிராமணனாகிறவனுக்கென்பது அர்த்தம். இப்பொழுது எல்லா விபகாரங்களையும் செய்து, எல்லா சுகபோகங்களையும் அனுபவித்துக் கொண்டு வீட்டிலிருந்து கொண்டு நான் பிராமணன் என்கிறார்கள். உற்றார் உறவினருடனிருந்து பிள்ளைகளை பி. ஏ. க்கு அனுப்பிக் கொண்டு, நான் பிராமணன், என் மகனும் பிராமணன் தான், என்று சொல்லுகிறவர்களிருக்கிறார்களே யல்லாமல், காபியைவிட்டு காட்டிற்குப் போய் பிராமணனாவதற்கு உபதேசம் கேட்பவர்களில்லை.

குறுக்கின பாலையும், திம்பு திவாசையும் தள்ளி, நாட்டு கோட்டையார் நகரம் சுற்றுவதை நிறுத்தி, பணக்காரர்கள் வாசல் நுழைவதை விட்டு காட்டிலிருந்து உபதேசம் பண்ணும் குருவுமில்லை, இந்தக் காலத்தில் உபதேசமும் வேண்டியதில்லை, அச்சுப் புஸ்தகமாகவிருக்கிறது. ஜர்மனியில் வேதம் படித்து இங்கிலாந்தில் மொழி பெயர்த்து, அமெரிக்காவில் பிரசங்கம் செய்யப்பட்டு நமது நாட்டிற்கு உபதேசிக்கப் படுகின்றன. அமெரிக்காவில் பிறந்த கர்னல் ஆல்காட்டும் இங்கிலாந்தில்பிறந்த அன்னிபெசண்டு அம்மையாரும் நமது நாட்டு ஐகோர்ட்டு ஜட்ஜிகள் பெரிய வக்கீல்கள் முதலிய பெரிய பிராமணர்களுக்கு குருவாய் உபதேச கர்த்தர்களாய் இன்றும் விளங்குகிறார்களே அவர்களெல்லாம் எந்த வியாசவம்சத்தவர்கள்.

தங்கள் கலாசாலை காடல்ல, குருகுலமுமல்ல. மாளிகை நந்தவனங்கள் நிறைந்து, ஆங்கிலேய நாட்டின் கல்விச் சாலையை ஒத்தது. அங்குள்ள உபாத்தியாயர்கள் பிராமணத் தன்மையை உபதேசம் பண்ணப்பட்ட ரிஷிகளுமல்ல. பிராமணத் தன்மையை அடைய ஆசைப்பட்டு வந்த மாணுக்கர்களுமங்கில்லை, வேதம்படிப்பதை விட்டு மிலேச்ச பாஷை படித்தவன் பிரஷ்டன் என்று வேதம் சொல்லுகிறது. வேதப்படி பிரஷ்டரான பார்ப்பார்களே உங்கள் கலாசாலையில் நிறைந்திருக்கிறார்கள்

பார்ப்பார பையன்கள் தான் படிப்பதற்குப் பக்குவ முள்ளவர்களென்று சொல்வதில் ஒரு சிறிதும் நியாயமில்லை. எல்லா ஜாதிக்காரப் பையன்களும் படித்து எல்லாவித பரீட்சைகளிலும் தேரத்தான் செய்கிறார்கள். பார்ப்பாரப்பையன்கள் படித்தால்இவ்வுலகவாழ்க்கையைவிட்டுமேலுலகவாழ்க்கையை விரும்புவார்கள் அது மற்றவர்களால் சாத்தியமில்லை என்று சொல்லலாமே என்னில், அந்தவகுப்பில் படித்து தேர்ந்தபாப்பாரபையன்களும் இவ்வுலக வாழ்க்கையை விட்டு மேலுலக வாழ்க்கையை விரும்பினதையும் காணோம், சோற்றையும் தெட்சிணையையும் விரும்புவதுபோல மோக்ஷத்தையே விரும்பினதையும்

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

மன்னார் குடியில் கூடிய தஞ்சை ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் திறப்பாளர் தோழர் முத்துசாமிவல்லத்தரசு பி. ஏ. பி. எல். அவர்கள் செய்த சொற்பொழிவு.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

தர்மமே சூனியமாகப் போயிருக்கும் இந்தேசத்திலே, இறந்து பட்ட பெற்றோர்க்கும், பாட்டன் பாட்டியர்க்கும் சிரார்த்தம், திதி, திவசம் செய்யும் ஓர் முறையைப் பார்ப்பனர்கள் நூதனமாக வகுத்துள்ளார்கள். இறந்து பட்ட தம் முன்னோர்களைக் குறித்து ஊனும், உடையும் படைத்து அவற்றை ஆரியப் பார்ப்பனர்களுக்கு கொடுத்தலாகிய சிரார்த்தத்தை பண்டைத் தமிழர் செய்தவரல்லர். இப்பிறவியில் நமக்குத் தாய் தந்தையர்களாய் இருப்பவர்கள் இதனை விடுத்து மறு பிறவியில் வேறு தாய் தந்தையர்க்குப் பிள்ளைகளாய்ப் பிறக்கின்றனர், இது நாலடியார் போன்றவர்களின்,

"எனக்குத் தாயானவள் என்னை
ஈங்கிட்டுத்
தனக்குத் தாய் நாடியே சென்றாள்-
தனக்குத்
தாயாகியவளும் அதுவானல் தாய்
தாய்க்
கொண்டேகும் அளித்திவ்வுலகு"

என்னும் செய்யுள் அறிவுறுத்திய வாற்றால் நன்கு தெரியப்படுத்தல் காண்க. ஆதலின் இறந்து பட்ட தாய் தந்தையரை நோக்கி நம்மனோர் இப்போது செய்யும் சிரார்த்தமும், அதில் அவர்கள் பார்ப்பனருக்கு வழங்கும் பண்டங்களும் அவர்களுக்குச் சிறிதும் பயன்படாதென்பது திண்ணம். இவ்வுண்மையைக் கண்ட வேதநூற் புலமையிற் சிறந்த தயானந்த சரஸ்வதி சுவாமிகளும் சிரார்த்தம் செய்து பார்ப்பனருக்கு வழங்குவது பயனற்றதென்று வற்புறுத்திக் கூறியுள்ளார்.

இன்னும் உற்று நோக்குங்கால், மிகப் பழைய காலத்தில் கோவில் வழிபாடின்றி இயற்கை வழிபாடே வழக்கத்திலிருந்தது. பண்டைக் காலத்தில் கோவில்களின் அமைப்பும் வழிபாடும் பொருளுடையனவாயிருந்தன. இயற்கையின் உரையும் இறைவன் என்னும் உண்மையை அறிவுறுத்துங் கருவிகளாக அவைகள் துணைபுரிந்து வந்தன. இப்பொழுது அந்நோக்கினின்றும்வழுவி சீர்குலைந்து விட்டன. கோவில்கள் தற்காலம் சோம்பேரிப் பார்ப்பனர் பிழைக்குமிடங்களாகவும், உலகத்திலுள்ள கொடும் செய்கைகளுக்கெல்லாம் உறைவிடமாகவும் மாறி விட்டன. பஞ்சமும் பிணியும் மக்களை வாட்டும் இந்நாளில், கல்லிலும் சுண்ணாம்பிலும் பெரும்பணம் போட்டுக் கட்டிய கோவில்களின் பாழ்பட்ட நிலையைக் கண்ட கிறிஸ்து பெருமானும் கோவில்களைக் "கள்ளர் குகை" யென்றும், காந்தி அவர்கள்வேசையர் விடுதி யென்றும் கூறியுள்ளார்கள். கோவில்களில் சாதிப் பேயும் இரு பிறப்பாளர்களும் தாண்டவமாடுகிறார்கள். பிறப்பை ஒட்டிய சாதி வேற்றுமை கோவில்களில் நுழைந்து அன்றே ஆண்டவன் அருள் மனத்தைக் குலையச் செய்தது; பன்றிக்கு அருள் சுரந்தபரமன், கருங்குருவிக்கு கருணை பெய்த கடவுள், நாரைக்கு முக்தி கொடுத்த நாதன் ஆறறிவுடைய மக்கள் வரவையா தகைவன்? சாதிக் கொடுமை நிகழும் ஓரிடத்தில் நீதிக்கடவுள், அன்புக் கடவுள், அறக்கடவுள், வீற்றிருக்க மாட்டானென்பது நிச்சயம். என்னவாகிலும் கடவுளிருப்பிடத்தில் கூட அணுகவொட்டாது செய்யும் பரம சண்டாளர்களான பார்ப்பனரின் அறிவு கெட்ட அடாத செய்கையைக் கண்டித்து சீர்திருத்தும் காலம் சமீபத்திலே தென்படும் இயல்புள்ளது.

உயர்ந்த சாதி என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனரும் ஏனையரும் தம்மோடத்த மக்களை எவ்வளவு இழிவாக நடத்துகிறார்கள். இழிந்தோர்களாக, ஒதுக்கப்பட்டவர்கள் எவ்வளவு துன்பத்தை அடைந்தாலும் அவர்களை உயர்ந்த சாதியாரென்போர் கண்ணெடுத்தும் பார்க்கின்றார்களில்லை. தாழ்ந்த ஜாதியாரென்று சொல்லப்படும் மக்களிடம் எல்லாவிதமான ஏவற்றொழிலையும் வாங்கிக் கொண்டு அவற்றால் செல்வமுடையவராய் வாழ்கின்றவர்கள், அவ்வேழை ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு கூட கிடைக்காமற் களைத்து கிடக்க அவருக்கு ஒரு பிடி சோறாவது கொடுக்கின்றார்களா? இழிந்த சாதியாரென்று சொல்லப்படும் மக்கள் கடு வெய்யிலில் நாள் முழுதும் நின்று கை எரியக், கால் ஓய, முதுகு நோக வெட்டி எடுத்துத்தந்தகிணற்று நீரை நமது வீட்டு நிழலிலிருந்து வெட்டி வேர் இட்டு, மணம் ஊட்டி பருகுகின்ற மேற்சாதியார், கீழ் சாதியார்கள், வெய்யிலால் நாவறண்டு உடல் தளர்ந்து ஒரு குடங்கை நீராவது முகர்ந்து குடிக்கலாமென்று அக்கிணற்றண்டை வந்தால் அவர் எவ்வளவு வன்னெஞ்சத்தோடு விரட்டுகின்றார்கள். தாக விடாய் தீர ஒரு குவளை தண்ணீர் தரவேணுமென்று வேண்டினாலும், கொடுக்கின் சேஷமாகி விடுமென்று கூசாமல் உரைத்திடுவர். இத்தகைய கொடும் சுயநலச் செய்கைகள் மிகுந்திருந்தது பற்றி, தமிழ் கவிவாணர்களான கம்பரும் காளமேகப் புலவரும் போன்ற பெரியார்கள்.

செட்டி மக்கள் வாசல் வழி
செல்லோமே
செக்காரப் பொட்டி மக்கள்
வாசல் வழி போகோமே
முட்டிபுகும் பார்ப்பார்
அகத்தை எட்டி பாரோமே
எந்நாளும் காப்பரே வேளாளர்காண்"
சுருக்கவிழ்ந்த முன் குடுமிச்சோழியர்
சோற்றுப் பொருக்குலர்ந்த வாயா
திருக்குடந்தைக் கோட்டானே
நாயே குரங்கே
உனையொருத் திபோட்டாளே வேலை
யற்றுப் போய்

என்று கடிந்திருக்கிறார்கள்.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்றார் பாரதியார். எல்லா வற்றிற்கும் முதன்மை பெற்று விளங்கும் பெண்ணிற்கு உரிமை வழங்க வேண்டுமா வேண்டாமா வென்னும் ஆராய்ச்சி இப்பொழுதும் எங்கும் நடைபெற்று வருகின்றது. உரிமை யென்பது ஒருவர் கொடுப்பது மன்று, ஒருவர் வாங்குவதுமன்று. அஃது எவரிடத்தும் எல்லா விடத்தும் இயற்கையாய் அமைந்து கிடப்பது. மேல் நாட்டார் பெண்ணுரிமை கடியாமல் வாழ்வதால் நாகரீக நுட்பமுணர்ந்தவரென்று நம்மவர் பெண்ணுரிமை கடிவதால் நாகரிக நுட்பமறியாதாரென்றும் மதிக்கப்பட்டு வருகிறது. ஒரு நாட்டில் நாகரிகம் பெண்மக்கள் நிலைமையைப் பொறுத்ததென்பது எவரும் கொள்ளத் தக்கது. உண்மை பண்டைய நாளில் நம் நாட்டில் பெண் மணிகள் கல்வியாளர்களாய், வீரத் தாய்மார்களாய், அரசிகளாய், எவ்வினையும் ஆற்ற வல்லவர்களாயிருந்தனர். அந்நாளில் நாடு உற்றிருந்த செழுமைக்கோர் அளவில்லை. பழந்தமிழ் நூல்களைத் துருவித்துருவி ஆராய்ந்தால் அவைகளில் யாண்டும் பெண்ணுரிமை காணலாம். பெண் தாழ்ந்தவள்; அடிமை யென்னும், உணர்வே யில்லை. பழந்தமிழ் நாட்டுப் பெண் மணிகள் வீரச் செயல்கள் பிறவும் போற்றற் குரியன. நரம்பு தோல் வற்றிய முதியோர் ஒருத்தியின் புதல்வன் போர்க்கோலம்தாங்கி அமர்க்களம் சென்றனன். அவன் போரிடை புறமுதுகிட்டுப்பட்டான், என்று பலர் அம்முதியோளிடம் அறைந்தனர். அது கேட்டஅன்னை தனது முதுமையைச் சிறிதும் கருதாது வாள்தாங்கி, இது உண்மையாயின் அவனுக்கு பால் ஊட்டிய இம் மார்பை இவ்வாளால் அறுப்பேன் என்று போர்க்களம் புகுந்து ஊதுபட்டு மடிந்து கிடக்கும் மகனைக் கண்டு, அத்தாய் அவனை ஈன்றபொழுதினும் பெரிது வந்தனள். இத்தகைய வீரத் தாய்மார்கள் வாழ்ந்த இந்தத் தமிழ்நாடு. இவ்வீரத்திற் கடிப்படை இந்நாளில் பெண்மக்களுக்கிருந்த உரிமையேயாகும்.

மனைவியை ஆண்மகன் இழந்தால், அவன் தண்டூன்றி தள்ளாடுகின்ற கிழவனாக யிருந்தும் ஒரு கட்டழகியை மறுமணம் செய்து கொள்ளலாம். இளம் பெண்ணொருத்தி கணவனை இழந்தாலோ, அவள் மொட்டையடித்து உலகத்தைத் துறத்தல் வேண்டும். விதி யென்றால் இருபாலார்க்கும் ஒரே மாதிரியாகவல்லவோ இருக்க வேண்டும். ஆணாகப் பிறந்தால் எல்லாம் செய்யலாம் பெண்ணாகப் பிறந்தவர்களுக்கு மட்டும் விதிகள், கட்டுப்பாடுகள், தண்டனைகள்! கைம்மை நிலை யென்றால் பெண்ணுலகிற்கும் ஆணுலகிற்கும் பொதுவானது, பெண் கைம்மை என்னும் சிறுமை நினைவிலுறும் போது என்பு நெக்கு விடுகிறது. இப்பாழும் நாட்டில் ஏன் பிறந்தோம் என்று நினைந்து நினைந்து ஏங்கவும் நேர்கிறது. பெண் கைம்மை எய்தினால் அவள் எதிரில் வரக்கூடாதாம், அப்பெண் மூதேவியாய் விட்டனளாம். கைம்மை யெய்திய ஆண் மகனோ எல்லாவற்றிலும் கலந்து கொள்ளலாம். அவன் பல் விழுந்த கிழவனாயினும் பதினாறு வயது கட்டழகியை மணம் செய்து கொள்ளலாம். இவ்வேற்றுமை இயற்கையிலுளதா? இஃது இரக்கமிலா வன்கணாளர்கள் இடைக்காலத்தில் விதித்த கொடுமை. பால்மணம்மாறா பச்சிளங் குழந்தை கைம்மை யெய்தினும் மறு மணம் செய்து கொள்ளக் கூடாது. உடன் கட்டை யேறுதல், பால்யவிவாகம், விதவைகளின் துன்புற்ற வாழ்க்கை, பெண்களின் பிற்போக்கான நிலை, இவ்வளவும் பார்ப்பனர்கள் மதத்தின் கொடுமையேயாகும். பல்வேறு சட்டங்களால் மேற்கண்ட மதக் கொடுமைகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றனவேயொழிய மதக்காரர்களின் நல் எண்ணத்தின் மேல் யாதொரு பரிகாரமும் ஏற்படவில்லை. நிற்க,

மனிதர் வாழ்க்கையை மூன்று நிலைகளாக விவரிக்கலாம். முதலாவது உடலையும் உயிரையும் பாதுகாக்க மட்டும் அநாவசியமான வசதியை உடைத்தாய நிலைமை, அஃதில்லாவிட்டால் உயிர் வாழ்வது மிகக் கடினமாகும். இரண்டாவது சிற்சில வசதிகளுடன் கஷ்டமில்லாது வாழக் கூடிய நிலைமை, கடைசியாக, மிகுந்த சௌகரியங்களுக்கிடையில் வாழ்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

பெண் மக்களே எழுங்கள்!

வைதீகக்கோட்டையைத் தகர்த்தெறிவோம்.

(திருமதி எஸ். நீலாவதி)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

"விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப்பெண்கள் விரைவிலொழிப்பாராம்" என்ற பெரியாரின் பொன்மொழியைத் துணைக்கொண்டு போர் புரியத்தொடங்கி விட்டோம். ஆண்களோடு பெண்கள், சரிநிகர் சமான மென்ற மாபெரும் இயக்கம் பெண் மக்கட்குப் பேருதவி செய்யத் தயாரா யிருக்கின்றது. எங்கும் பொங்கி யெழும் சுதந்திர வெள்ளம், இனி எவ்வித அணைக்கும் கட்டுப்படப் போவதில்லை. நிற்க, பெண் மக்களிடம் சுதந்திர உணர்ச்சி தோன்றியது முதல் இது வரை நடந்தேறிய எந்த மகாநாட்டிலும் வைதீகத்தை வாழ்த்தி ஒரு சிறு பேச்சும் நிகழ்ந்ததில்லை யென்பதை மடி சஞ்சிகள் அறியா விட்டாலும் மற்றையோர் அறிவாரன்றோ? இந்தப் பஞ்சாங்கப் பேர்வழிகள் மூளை இப்பூவுலகில் இல்லை போலும்! நாடெங்கும் இடிமுழக்கம் செய்து வரும் பெண்கள் ஒலியில் கேட்கப்படுவது என்ன என்பதை வைதீகர்களே! சிறிது சிந்தியுங்கள். எது ஒன்றையும் சிந்தியாது வாய்க்கு வந்தபடி வறட்டுத் தவளைகள் போல் கத்துவது தானா பிரமன் முகத்திலிருந்து பிறந்து வந்த உங்கள் தொழில்! உலகத்தின் ரட்சிப்பு கர்த்தாவான பிரமன் உங்கட்கு இப்புத்தியைத் தான் கற்பித்தானா? வெகு அழகு! என்றும் சுயநலமிகளாகவே வாழ வரங் கொடுத்த உங்கள் கருணைக் கடவுளை வாழ்த்த வேண்டியது அவசியமே. ஆனால், எதற்கும் ஓர் அளவுண்டு என்பது போல் சுயநல வாழ்க்கையும் எத்தனை நாட்கள் தான் நீடித்திருக்கும், எல்லாம் எல்லார்க்கும் பொது நலப் பரிதியின் முன், "உலகமே என் கீழ்" என்னும் சுயநலப்பனி நெடுநேரம் நீடித்திருக்க முடியாதல்லவா? இது இத்துடன் நிற்கட்டும், விஷயத்தைத்தொடங்குவோம். இந்த நூற்றாண்டில் எழுதுகோல் எடுக்கும் எந்தப் பெண்ணும், மேடை மீதேறும் பெண்கள் யாவரும், "விடுதலை" "விடுதலை" என்றே கர்ச்சிக்கின்றனர். அவ்விடுதலைக்கு வேண்டிய மருந்துகளையும், அறையாமற் போவதில்லை. இதையெல்லாம் கண்டு பீதியடைந்த வைதீகர்கள் "அவன் கெட்டான் குடிகாரன் எனக்கு இரண்டு டிராம், போடு" என்ற கணக்கில், மதம் போச்சு, சாத்திரம் போச்சு என்று பெண்கள் மகாநாட்டையே கண்டிக்கப் புறப்பட்டு விட்டார்கள். மதத்தையும், சாத்திரத்தையும் கைப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கு மிவர்கள் மகாநாடு எவ்விதம்கூட்டினார்களென்பதே வியப்பாயிருக்கின்றது. அட்வோகேட், ஆங்கிலமேபேசத்தெரிந்தவர், பி. ஏ. பி. எல். பட்டதாரி, ஒருவர் பார்ப்பன மகாநாட்டின் தலைவரென்றால், அதுபற்றி அறிஞருலகம் நகையாடவே செய்யுமன்றோ? இவர்கள் தான் மதசாத்திரம் மண்ணாய்ப் போகின்றதென்று பெண்கள் விடுதலையை எதிர்க்கின்றார்கள். பாலிய விவாகம் செய்யா விடில் பாபம்வந்து சூழுமாம். இவர்கள் பேச்சுக்கு அர்த்தமே கிடையாது. சம்மத வயதுக்கமிட்டியின் முன்பு சாட்சியம் கூறிய அநேக பார்ப்பனர்கள் பால்ய விவாகம் சாத்திர சம்மதமல்லவென அபிப்பிராயம் தெரிவித்தார்கள். தேசநன்மையைக் கோரும் யாவரும் பாலிய விவாகம் ஒழிக! ஒழிக!! என்றே ஓலமிட்டனர். மேலும், பாலிய விவாகம் வேத சம்மதமல்லவென்பதற்கு வேதத்திலேயே ஓர் சுலோகம் இருக்கின்றது அதாவது, "ருதுவானபெண் மூன்று வருடம் வரைக்கும் தந்தையின் பராமரிப்பில் இருக்கவும், மூன்று வருடத்திற்கு மேல் (தகுந்த *வரன் கிடைக்காவிடில்) எந்த சாதியிலேனும் வரனை வகித்து மணந்து கொள்ளலாம்." இதில் வயது வந்தமணமும் சிறிது மணச் சுதந்திரமும் அன்றோ கலந்து நிற்கின்றது. ருதுவான பின்னர் மூன்று வருடம் கழித்து மணம் செய்தலே வேத சம்மதம், இதன்படி பார்த்தால் சாரதா சட்டத்தில் விதித்திருக்கும் வயதுபோதாது, உண்மையான வேத பக்தர்கள் சாரதா சட்ட வயதை மேலும் உயர்த்தவே முயற்சிப்பார்கள். விதவா விவாகம் முதலில் வேண்டியது இவர் தம் சமூகத்திற்கே யாகும். பத்து பேர் நிற்கும் ஒரு கூட்டத்தில் பார்ப்பார மொட்டைதான் ஒன்பது தென்படுகின்றது. ஆனால் அது பற்றி அவர்கள் கவலை கொள்ளக் காரணமில்லை தான். கள்ளிக்கும், கற்றாழைக்கும், கிணற்றுக்கும், சாக்கடைக்கும் பஞ்சமோ நமது நாட்டில், அதில் அழகாய் ஈன்ற குழவிகளை எடுத்தெறிந்து விட்டால் வேலை முடிந்தது. இதைவிட்டு ஊரறியத்திருமணம் புரிந்து சாதிக்கு இழிவையும், சாத்திரத்திற்கு ஓர் மாசும் இழைக்க உச்சிக்குடுமிகள் கூட்டம் எங்ஙனம் ஒருப்படும்? சகலமும் தெய்வீகமென்னில் விபசாரமும் சிசுவதையும் அதனைச் சேர்ந்தது தானே? ஆனால் ஆண்கள் தான் அவ்வாறென்னில் பார்ப்பனப் பெண்கள் கொஞ்சமும் அஞ்சுதலின்றித் தங்கள் சுய உணர்வை யிழந்து தம் மேலாட்களுக்குத் துணை புரிகின்றார்களே! பார்ப்பனப் பெண்களுக்கு எள்ளளவேனும், நல்லுணர்வு இருக்கும் பட்சத்தில் இத்தீய வேலைகளில் ஈடுபடுவார்களா? எவ்வளவு அயோக்கியத்தனம் பண்ணமுடியுமோ, அவ்வளவும் பண்ணி விட்டு முடிவில் சாதியையும், சாத்திரத்தையும், காப்பாற்றப் புறப்படுகிறார்களே! எவ்வளவு சமர்த்து;

பெண்மக்களுக்கோர் வார்த்தை.

ஆனால், நமது பெண் மக்களுக்கு நான் கூறுவதொன்று- சகோதரிகளே! பார்ப்பனப் புரட்டைப் பார்த்து நாம் எவ்வளவு தூரம் மயங்குகின்றோமோ, அவ்வளவும் நமக்குத் தீமையே? நம்முடைய உரிமைகளுக்காக, நமது முன்னேற்றத்திற்காக உயிரையும் தியாகம் செய்யத் தயாராய் முன் வர வேண்டும் நமது விடுதலைக்கு முதலில் முக்கியமாய் வேண்டியது கல்வியென்னும் அழியாச் செல்வமே, அவ்வழியாச் செல்வத்தை அடையும் வழி சொத்துரிமையே. தற்போது பெண்களுக்கு சொத்துரிமை கிடையாது என்பதையும் யான் அறியாமலில்லை. சொத்துரிமை பெறாத வரையில் நாம் எவ்விதத் தொண்டு புரியவும் லாயக்கற்றவர்களே! நம் நாட்டில் ஆண்களின் கையை எதிர்பார்த்து வாழ்வதே பெண்களின் நிலைமையாயிருக்கின்றது. இக்காரணம் பற்றியே பெண்கள் மேலும், மேலும், அடிமைகளாக்கப்படுகின்றார்கள். எனவே இக்கட்டுப்பாட்டை உடைத்தெறிய வேண்டியது அவசியம். மற்றொரு விசனகரமான செய்தியையும் ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். தற்போது படித்து பட்டம் பெற்ற பெண்கள் இரண்டொருவர் இருந்தாலும் அவர்களால் மாதருலகம் எவ்வித நன்மையும் எய்தாது. அன்னாரும் "குடத்திற்குள் விளக்கென" பிரகாசமின்றி வாழ்கின்றனர். அதோடுமட்டுமல்ல; வைதீகப்பிடுங்கல்களுக்கு மேலாக வைதீகத்திலாழ்ந்திருக்கின்றார்கள். எனவே படித்தபெண்கள் எனப்படுவோர்களே, பெண்கள் சுதந்தரத்தைப்பற்றித் தவறான எண்ணங்கொண்டிருப்பார்களானால் சாதாரணம் 'அ, என்றால் என்ன என்று கேட்கக்கூடிய பெண்கள் எவ்வித நிலைமையிலிருப்பார்களென்பதை அறிவுள்ளபெண்களே ஆராய்ந்து தெரியட்டும். பெண்மணிகளே! கல்வியிற்றேர்ந்த கண்மணிகளே! அறியாமையை அகற்றி, மூடநம்பிக்கையை ஒழித்து, அடிமைத்துன்பம் களைந்து, வைதீகத்தை வெட்டி வீழ்த்த இன்றே எழுங்கள்! எழுங்கள்!! இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அஞ்சாமல் பார்ப்பனர்கள் மகாநாடு கூட்டிப் பெண்ணுரிமையைக்கடிந்து பெண்கள் முன்னேற்றக்கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதறிந்து உங்கள் இரத்தம் கொதிக்கவில்லையா? "நாங்கள் விழித்துக் கொண்டுதான் இருக்கிறோம்" என பெண்படை வீறிட்டெழுந்தாலன்றோ வைதீகர் வாயடங்கும். பெண்ணுலக விடுதலைக்குப் பெண்களே முட்டுக்கட்டை போடுவதென்னில் "வேலியே பயிரைமேயும்" செய்தியைத் தானே ஒக்கும், சுதந்தரம் இல்லையென ஒருபக்கம் கதறிக்கொண்டு வருங்காலை மறுபக்கம் சுதந்தரம் வாங்கத்தெரியாத நிலைமையில் இருப்பதை நோக்க என்னுரைப்பது? பாழும் வைதீகம் செய்த தீவினைகள் போதாதென்று மேலும் செய்ய முயற்சித்து வருவதைப்பார்த்துக்கொண்டு வாழாவிருப்போமானால் நாம் மீளாப்படுகுழியில் வீழ்வோமென்பதில் ஐயமென்ன? மத சாத்திர வேதத்தைக்காட்டிப் பெண்மக்களை ஏமாற்றி அடிமைகொண்ட பார்ப்பனீயத்தை, வைதீகத்தை வெட்டி வீழ்த்த வீரப்பெண்களே! விரைவிலெழுங்கள். வைதீகக்கோட்டையைத்தகர்த்தெறிந்து சுயமரியாதையைக்கைக்கொண்டு, சுதந்தரவாழ்க்கையிலீடுபட உங்கள் மனம் துணிகின்றதா? அன்றி, பழம்புராணக்குப்பைகளுக்கு அடிமைப்பட்டு நயவஞ்சகர்களிடை அவதிப்பட உங்கள் மனம் ஆசைப்படுகின்றதா? அருமைச்சகோதரிகளே! ஆழ்ந்து யோசியுங்கள்! தேர்ந்து திடம்பெறுங்கள்! கூர்ந்து பார்த்துக்கொடுமைகளை விலக்க "சுயமரியாதை" என்னும் கூர்வாளேந்தி கூசாது வெளிவாருங்கள்!

வைதீகர்களே வலை வீசவேண்டாம்.

இறுதியாக ஒன்று கூற விரும்புகிறேன். "பார்ப்பனீயத்தை நிலைநாட்ட சபைகள் ஏற்படுத்துவதோடு நில்லாமல் வாலிபர்களிடையேயும் இக்கொள்கையைப்பரப்பவேண்டுமாம்" வைதீகர்களே! ஜம்பம்பலியாது! வலைவீச வேண்டாம் சுயமரியாதை இயக்கத்தில் நிறைந்துள்ள நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதுபேர் அனைவரும் வாலிப சிங்கங்களே! என்பதை உணருங்கள்! உணருங்கள்!! மடிசஞ்சிகளாகிய உங்கள் மடக்குரைகள் யாவும், வாலிபரிடத்து, "செவிடன் காதில் ஊதிய சங்கு" எனவேஆகும். மாசுமறுவற்ற வாலிபருள்ளம் சுதந்தரச்சண்டமாருதத்தால் சூழ்ந்து

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

இந்த ஆபாசம் எந்த நாட்டிலுள்ளது?

வேத புராணங்களா— வெறு கூளவரக்குப்பைகளா?

பதிலிறுக்கும் பண்டிதர் வெளி வருக.

(திருமதி ஆர். அன்னபூரணியம்மாள்)

அன்பிலகும் தோழர்களே!

உலகெங்கணும் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற ஒலி தொனித்துக்கொண்டிருப்பதையும், விஞ்ஞானம் என்னும் இயற்கை சாஸ்திரத்தின் மூலம் பகுத்தறிவு பரவி, மனிதன் எவ்வெவ் வழிகளில் உழைத்து சுகவாழ்க்கையையடைதல் கூடும் என்பதை தினே, தினே ஆய்ந்து முன்னேற்றமடைவதில் கண்ணுங்கருத்துமாயிருந்து வரும் மேனாட்டாரின் விடா முயற்சியின் பயனையும் நாம் பிரத்தியட்சமாக அறிந்து வருகின்றோம்.

உலகில் சுதந்தர உணர்ச்சி தோன்றி, ஜனநாயகத்தத்துவம் பரவி, சமத்துவத்தென்றலும், பகுத்தறிவுப் பாஸ்கரனும் பிரகாசமாய் ஜொலித்துக்கொண்டிருக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில், பழமையென்பதை மிதித்தொழித்து மதக்கொள்கை என்பவற்றை உதறித்தள்ளி, பகுத்தறிவின் விசாலத்தன்மையின் உதவியால் இயற்கை சாஸ்திரத்தின் துணைபற்றி பிரமிக்கத்தக்க சாதனங்களையெல்லாம் கண்டுபிடித்து சுதந்தரவாழ்க்கையை மேற்கொண்டும் நமக்கு வழிகாட்டிகளாகவும், உதாரணபீடங்களாகவும் மேனாட்டார் விளக்கிக்கொண்டிருக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில், நமது இந்தியாவில் சாதிச்சண்டை, சமயப்பூசல், தீண்டாமைக்கொடுமை, உயர்வுதாழ்வு, குழந்தைவிவாகம், விதவைக்கொடுமை, அடிமைத்தன்மை, முதலிய அந்தகார இருள்சூழப்பெற்று, அல்லோல கல்லோலப்பட்டு நிற்கின்றதென்பதை உன்னும்போது எந்த பொதுநலவாதியின் உள்ளந்தான் கொதிக்காமலிருக்கமுடியும்?

அத்தகைய கொடுமைகளைத்தெரிந்து மக்கள் தர்மத்திற்குச்சிறிதும் பொருந்தாக்கேடுற்ற மாக்கள் தர்மத்தை அனுஷ்டித்து அறியாமையில் ஆழ்ந்துகிடக்கும் பாமர மக்களை கடைத்தேற்றி சமத்துவத்தைப்பரவச்செய்வது நமது சுயமரியாதை இயக்கமேயென்பது மிகையாகாது.

சிலர் கருதுகிறபடி சுயமரியாதை இயக்கம் சிலருடைய சுயநலத்தையடிப்படையாகக்கொண்டு தூண்டப்பட்டு வருகின்றதென்பது மிகவும் அறியாமையாகும். மக்கள் நாகரிக எல்லையையடைந்து சமுதாயமாகச் சேர்ந்து வாழத்தொடங்கிய காலந்தொட்டே மனித சமூகத்தைச் சுயமரியாதை உணர்ச்சி பின் தொடர்ந்துவருகின்றதென்றே கூறலாம். அவ்வுணர்ச்சி தீவிரப்பட்டெழும்பாமைக்குப் பல காரணங்கள் உண்டெனினும் மிருகத்தன்மையான எதிர்ப்புகளே அதற்கு முக்கியகாரணமென்பதற்குச்சான்றுகள் பலவாம்.

சாக்ரடீஸ், காலிலேயா, பிராட்லா முதலியோரின் பகுத்தறிவோடுக்கூடிய சுயமரியாதையுணர்ச்சியை அடக்கிக்கொண்டுவந்தது எது? மிருகபலமன்றோ? புத்தர்காலம்வரை பகுத்தறிவிற்கு இடம்கொடுக்காமல் அடக்கி இம்சித்துக்கொண்டுவந்தது எது? பார்ப்பனீயமன்றோ? புத்தர் ஒருதாழ்ந்த வகுப்புப்பெண்ணை புத்த சங்கத்தில் சேர்த்துக்கொண்டதற்காக பிராமணர்களெல்லாம் சேர்ந்து அரசனைத்துணையாகக்கொண்டு அவரையெதிர்த்தனரன்றோ? புத்தரது வாளாயுதம்போன்ற நுண்ணுணர் வானவாதம் அவர்களைச்சிதறடிக்காதிருந்தால் அவரது பகுத்தறிவியக்கம் இவ்வளவு தூரம் உலகில் பரந்து காணுமென்பதற்கு என்ன தடை? பார்ப்பனர்களுடைய வேதங்களைக் காதில் கேட்டால் ஈயத்தை உருக்கிச்சாய்த்தும், நாவில் உச்சரித்தால் நாவையறுத்தும் இம்சிக்கும்படி இந்துமதம் தாராளமாக வழிகாட்டுகையில் அம்மதத்தையெதிர்த்துபகுத்தறிவையுபயோகப்படுத்தினால் என்ன செய்திருப்பார்களென்பதை யோசித்துப்பாருங்கள். இராமர் காலத்தில் தவம்செய்த சூத்திரனே கொலைசெய்யப்பட்டானென்றால், மத ஆராய்ச்சி செய்வோர்கதியென்னாகுமென்று யோசித்துப்பாருங்கள். ஆகையால் சுயமரியாதை இயக்கம் புதியதோற்றமொன்றல்லவென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இனி இந்திய ஜனசமூகம் ஒற்றுமையற்று, பலவித அபிப்பிராய பேதங்களோடும், எண்ணற்ற ஜாதிப் பிரிவுகளோடும், அடிமைத்தனத்தோடும் அலக்கழிக்கப்பட்டு நிலைகுலைந்து நிற்பதற்குக்காரணமாயிருப்பவை எவையென்பதை பரிசீலனைச் செய்வது அவசியமாகும்.

இந்தியாவில் ஜாதிபேதம் தலைகாட்டியது ஆரியர்கள் வருகைக்குப் பின்பேயென்பதை அக்காலத்தோர் வரைந்துபோந்த நூற்களாலும், சரித்திரவாயிலாகவும் நாம் திண்ணமாயறிந்திருக்கிறோம். ஆனால் ஜாதிபேதம் ஏற்படுத்தப்பட்டது எதற்காக? அவற்றில் ஏதேனும் நன்மையுண்டா? அவற்றை இவ்விருபதாம் நூற்றாண்டிலும் இந்தியா விடாப்பிடியாய்ப்பிடித்துக்கொண்டு சீரழிய வேண்டுமா? என்பதைச்சிந்தித்துப் பார்த்தல் நமது கடமையாம்.

நாகரிகமுதிர்ந்த ஏனைய நாட்டினர் 'ஜாதிபேதம்' நான் உயர்ந்தவன் இவன் தாழ்ந்தவன் என்பதைக்குறிப்பிடும்போது நம்மை எள்ளி நகையாடுகிறார்கள்; இதிலும் விசேஷமாக தீண்டாமைக்கொடுமையை என்னென்றுரைப்பது? மனிதனுக்கு மனிதன் தீண்டிக்கொண்டால் ஜாதி கெட்டுப்போய்விடுகிறதாம்! தீட்டு ஒட்டிக்கொள்ளுகிறதாம்! மோட்சவாசல் தடைப்பட்டு போய்விடுகிறதாம்! என்ன பேதமையிது?

இவ்வளவு அழுத்தமாகவும், திருத்தமாகவும் இச்சாதி பேதத்தையும் தீண்டாமைத்திமிரையும் இந்தியாவுக்குள் புகுத்தியது ஆரியர் சூழ்ச்சியேயென்பது பிழையாகுமா?

ஆசியா மைனரிலிருந்து இமயமலைக்கணவாய்களின் வழியாக இந்தியாவுக்குள் புகுந்து சிந்து நதிதீரங்களில் குடியேறிய வட வாரியர்கள் சிவந்த மேனியராகவும் நம் நாட்டின் ஜாதிபேதமற்ற பூர்வீக திராவிடர்களாகும். தமிழ்மக்கள் கருமை கலந்த மாநிறத்தவராகவும் இருந்தமையால் ஏற்பட்ட நிறவேற்றுமையே வருணச் சிரமமாகமாறி ஜாதிபேதமாக வெளிப்பட்டது. அறியாமையில் ஆழ்ந்து கிடந்த பேதை மக்களை வசியப்படுத்த மேற்குறித்த ஜாதிபேதங்களை ஆதாரமாகக்கொண்டு இந்துமத நூற்களை எழுதியவர்களெல்லாம் ஆரியர்களேயாதலால் அவர்களது சுகவாழ்க்கையையுன்னி அவர்களே உலகில் உயர்ந்த ஜாதியினராகிய பூதேவரென்றும், ஏனையோர் படிப்படியாக அவர்களுக்குத்தாழ்ந்தவரென்றும் வரைந்துகொண்டார்கள்.

இவர்களால் எழுதப்பட்டுள்ள வேதங்கள் முதல்புராணமீறாக உள்ள எல்லா நூல்களின் போக்கையும் ஆராயப்புகின் காட்டுமிராண்டி வாழ்க்கையிலிருந்த மனிதரும் அருவருத்துத்தள்ளுவார்களென்றால் அதிகம் கூறவேண்டியதில்லையென்று கருதுகின்றேன். தீத்தொழிலாகியவேள்விக்கொடுமையும் பிராமணீயமுமே வேதங்களின் அடிப்படையான தத்வம், குதிரைமுதல் எளியராகவுள்ள பலவித ஜந்துக்களை வேள்வித்தீயிலிட்டுக்கொன்று, பொசுக்கி மண்ணும் மயிருமாக உண்டால் தேவர்களுக்கெல்லாம் திருப்தியுண்டாகுமென்று வேதங்கள் கூறுவதுடன் மனிதரையும் கொன்றுதின்ன வேதங்கள் அனுமதிக்கின்றதென்றால் அக்கொள்கையை காட்டுமிராண்டிகளும் ஏற்க அருவருப்பார்களென்பதில் என்ன சந்தேகம்? ஆனால் அவ்விதஇழிதொழிலை கடைப்பிடித்தோராயும், அவ்விதம் கடைப்பிடிப்பதே தூய்மையென்று கூறுவோருமாய ஒரு கூட்டத்தாரை எதற்கொப்பிடலாம் என்று கேட்கின்றேன்? அவர்கள் ராமராஜ்யத்தில் ஏற்படப்போகும் மியூசியத்தில் வைக்கஉபயோகப்படுவார்களேதவிர, இவ்விருபதாம் நூற்றாண்டின் மியூசியத்திற்கும் தகுதியாக மாட்டார்களென்பது எனது அபிப்பிராயம். அன்றியும் "பௌண்டரீகயாகம்," "சத்தியாகம்" முதலியவற்றின் அவலக்ஷணத்தைவாயால் கூறவும் வெறுப்பைத்தருகிறதென்றால் அவற்றைக்கொண்டாடிப் புகழ்வோரைமனித வர்க்கத்தில் சேர்க்கவும் தகுதியேற்படுமா? அத்தகையாளரைக்குருவாகக் கொள்ள வரிந்துக்கட்டிக்கொண்டு முன்வரும் நமது பார்ப்பனரல்லாத பெருமக்களைப்பற்றி வருந்தாதிருக்க முடியுமா? வென்றுகேட்கிறேன்.

இயமன் என்பவன் தன்புத்திரி யமுனையென்பவளை கற்பழிக்கயத்தனித்ததாக இருக்வேதம் 21 வது வசனம் கூறுகிறது. முதல் மனுதன் புத்திரியை மணந்திருக்கிறானென்று யஜுர்வேதம் 95 வது வசனம் கூறுகிறது. சோமபானம், சுராபானம் என்னும் மயக்கவஸ்துக்களையுண்டு செய்யவும் அதனையுட்கொள்ளவும் யஜுர்வேதம் 111ம் வசனம் கூறுகிறது. வசிஷ்டர் வருணன்வீட்டில்தானியம்திருடப்போனதாக இருக்வேதம் 20 வது வசனம் கூறுகிறது. நதிகள் ஒவ்வொன்று ஓடிக்கொண்டிருக்கிறதே, இவைகள் தூங்குகிறதில்லையாவென்று ஒரு ரிஷிபரிதாபப்படுகிறார். சந்திரன் ஏன்வெண்மையாயிருக்கிறான். இவன் எந்தவிடத்திலிருந்து புறப்படுகிறான். என்று இன்னொரு ரிஷிகேட்கின்றார்! இன்னும் புராண இதிகாசங்களை யாராயப்புகுவோமானால் விறலி விடுதூது, கிள்ளைவிடுதூது, முதலிய வற்றிலுள்ளசிற்றின்பவாடை பெருங்காயடப்பியைத்திறந்தார்போன்று வீசுகிறது. சோவியட் புஸ்தகங்கள் முதலியவற்றை தடைச்சசட்டங்கள் போட்டு நிறுத்துவதற்குபதிலாக, அப்புராணஇதிகாசங்களைத் தடைச் சட்டத்தினால்நிறுத்தவேண்டியது பேருபகாரமாகுமென்பதே எனது அப்பிராயம்.

பிரம்மா தன் புத்திரியையும், கிருஷ்ணன் குப்ஜலையையும், இராதாவையும், சிவன் ரிஷிபத்தினிகளையும், விஷ்ணு ஜலந்தரனுடைய மனைவி பிருந்தாவையும், இந்திரன் கௌதமர் மனைவி அகலிகையையும், சூரியன் குந்தியையும், சந்திரன் பிரகஸ்பதியின் மனைவி தாராவையும், வாயு வானரத்தின் மனைவி கேசரியையும், வருணன் அகஸ்தியர் தாய்

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

அரசனுங் கடவுளும்.

(செய்கோன் அறிவானந்தன்)

உலக மனிதர்கள், ஏன்! அரசனையுங் கடவுளையும் போற்றுகின்றனர், ஏன்! அவர்களை வணங்குகின்றனர், ஏன்! அவர்கள் கட்டளைக்கு அடங்கி நடக்கின்றனர் ஏன்! அவர்கள் துணை நோக்கித் தம் வாழ் நாளைக் கழிக்கின்றனர், ஏன்! அவர்களை வெறுக்கின்றனர், ஏன்! அவர்களை நிந்தித்து, வேண்டாம் வேண்டாம், ஒழிந்து போ என்று கூறுகின்றனர், ஒழிக்கவுங் கங்கணங் கட்டி அதற்கென வேண்டிய பகீரதப் பிரயத்தனமும் செய்கின்றனரென்று சற்று ஆராய்வோம்.

நாட்டையாளும் மன்னன் தன்னரசுக்குட்பட்ட குடிமக்களை, இன்ப வாழ்க்கையில் நடாத்தி, துன்பத்திற் சிக்கா வண்ணம் காப்பாற்றி எதிரிகள் சூழ்ச்சியால் மாளாமல், யாவுஞ் சமம், எல்லாரும் ஒன்றென்று அரசு புரிவனேல். அவ[illegible] ஆட்சி மக்கள் அ[illegible]னு கட[illegible] அவ[illegible] கலா வி[illegible]க் தலை யால் செய்து அவ்வரசனைக் கண்ணை யிமை காத்தல் போலக் காத்து போற்றி வருவார்கள். அப்புடிக்கின்றி தான் மாத்திரம் ஏகபோகசுகத்தை யனுபவித்துக் கொண்டு, மற்றையோர் கஷ்ட நஷ்டங்களைக் கொஞ்சமும் கவனியாமல், ஒருவரையொருவர் மேல் கீழாக்[illegible] [illegible] [illegible]வரு க்கும் [illegible] [illegible] மக் [illegible] [illegible]ன்ப [illegible] [illegible]க் கள் அன்னவன் பால் வெறுப்புந் துவேஷமுங் கொண்டு அவனது ஆட்சிக்கும் கேடு விளைவித்து அவனையும் மண்ணோடு மண்ணாக்கவும், எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இஃது உலக சரித்திரந் தெரிந்த யாவருக்கும் நன்கு தெரியும். உதாரணமாக, பிரான்சு, ஜெர்மனி, ரஷியா, இத்தேயங்களை எடுத்துக் கொள்வோம். ஆண்டு அத்தேயத்தரசர்கள்- மக்கள் நலங்கருதாது, தனக்கென வாழ்ந்து குடி மக்களின் வெறுப்பைக்கொண்டதனாலல்லவோ, அவர்கள் இருந்த இடந்தெரியாமல், மாண்டொழிந்தார்கள்.

இதே மாதிரி தானே நமக்கெல்லாம் ஏக கர்த்தாவென்று சொல்லப்படுகின்ற ஒரு கடவுள் நமக்கு ஒரே நீதியின்றி, ஒரு கண்ணில் வெண்ணையும் ஒரு கண்ணில் சுண்ணும்பும் பூசினால், வெண்ணை கொண்டவன் தன்னனே கொட்டுவான், சுண்ணங் கொண்டவன் சும்மா விருப்பானே! அறிவுக்களஞ்சிய அசட்டு வைதிகங்களே! உன்னுங்கள்! உன்னுங்கள். இம்மாதிரியான பாரபட்சமுள்ள, வன்னெஞ்சக் கொடிய கடவுள்; என்கட்கு வேண்டாம் வேண்டாமென்று கூறாது வேறென் செய்வார்கள்.

ஒருவன் நெற்றி வியர்வை நீராய்ப் பெருக உழைக்கவும், ஒருவன் சுற்றுங் கஷ்டமின்றிப் பிழைக்கவும், ஒருவன் பிடி அன்னத்துக்கு ஏமாந்து வாடியிருக்கவும், ஒருவன் தின்னசாதம்ஜீரணிக்க மருந்து தேடவும், ஒருவன் படுக்கப் பாயும் உடுக்க உடையுமின்றிப்பரிதவிக்கவும்,ஒருவன் பஞ்சணையிற் படுத்துப் பட்டுடுத்தி மகிழவும், ஒருவன் கண்குழிந்து கால் அயர்ந்து கஷ்டப்படவும் ஒருவன் கண்ணிக்கு மையிட்டுக் கால் வருட ஆள் தேடி நிற்கவும், ஒருவன்பிச்சை கேட்கவும் ஒருவன்இல்லைபோவென ஏசி விரட்டவும், ஒருவன் கூழுக்கு உப்பில்லை எனவும் ஒருவன்பாலுக்கு ருசியில்லை எனவும், இவ்வாறு ஒரு சாரார் இன்பத்தையும், ஒரு சாரார் துன்பத்தையும் தங்களது வாழ்நாளில் அனுபவிப்பரேல், இன்பங் கொள்ளுவோர் ஏற்றித் துதிக்கலாம். என்னப்பனே! என்னிறைவா! என்று போற்றித்துதிக்கலாம். துன்பங்கொள்ளுவோர் யாது செய்வது? ஐயோ பாவி; பாதகா! இவ்வாறு வஞ்சகஞ் செய்யும் நீ எங்கட்கு வேண்டாம், வேண்டா மென்று தானே கூறுவர்.

ஒரு சில கூட்டத்தார், தாங்களே உலக இன்பத்துக்கு ஏக வார்சு பெற்றவர்களென்றும், தங்களுக்கு அவ்வின்பம் சர்வ மான்யமாகக் கொடுத்திருப்பதாகவும் எண்ணி, தங்களைப் போன்ற மற்றையோரைத் தங்களது ஏவல் செய்வதற்காக கடவுளால் உற்பத்தி செய்யப்பட்டவர்களென்று அவர்கள் படும் கஷ்ட நஷ்டங்களைக் கொஞ்சமும் பாராது;தாங்களும் தங்கள் பெண்டு பிள்ளைகளும் சுகித்திருந்தால் போது மென்று நினைத்து மகிழ்ந்திருக்கவும், ஏனைய கூட்டத்தார் பசிப்பிணி தாளாது அன்னவர் இட்ட கட்டளையைத் திட்டமுடன் செய்து, மாடுபோலுழைத்து அதற்கேனத் தக்க கூலியும் பெறாது, அரை வயிற்றுக் கூழுக்கும் போதாமல் அனுதினமும் வாடி வதங்கி, நாடி தளர்ந்து ஏமார்ந்து நிற்கவும் பார்த்துக் கொண்டிருக்கும் நம்மை எல்லாம் காத்து ரட்சிப்பதாகச் சொல்லும் கடவுள் இருந்தென்ன இல்லா தொழிந்தால் தானென்! இத்தகைய பாரபட்சமுள்ள கடவுள் நமக்கு வேண்டா மென்று சுயமரியாதை இயக்கம் சொல்லுவதில் குற்றந்தானென்ன!

உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும், கடவுளால் உண்டாக்கப்பட்டு அவனது துணையினாலேயே உலகில் வாழ்ந்து வருகின்றன வென்றுகூறப்படுவது உண்மையாயின் ஏக தயாநிதியாகிய பாரபட்ச மில்லாத கடவுளுக்கு, நாமெல்லாம் ஒரே ஸ்தானமுள்ள குழந்தைகள் தானே! அப்படியாயின் ஏன் அக்கடவுள் அன்னவர் குழந்தைகளான நம்மைப் பல்வேறு பாகுபாடுகளுடன் பராமரிக்க வேண்டும்! இப்படியிருக்க கடவுள் பட்சபாதக மில்லாதவரென்று எவ்வாறு கூறலாம்! இவற்றை யெல்லாம்உற்றுநோக்குவமேல், இது ஒரு அற்ப செய்கையினுங் கேவலமாக வன்றோ காணக்கிடக்கின்றன.

ஆனால் கடவுள் பக்தர்களென்றுகூறிக் கொள்ளும் ஒரு சில ஆஸ்திகர்கள், கடவுள் மனிதனைப் படைத்து அவனுக்குப் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறார். அவனவனும் அவனவன் அறிவைக் கொண்டே வாழ்க்கை நடாத்த வேண்டும். அவ்வாழ்க்கையில்அவனவனனுபவிக்கும் சுகதுக்கங்கள் அவனவனது அறிவையே பொருத்திருக்கின்றனவென்றும், அதற்குக் கடவுள் ஜவாப்தாரியல்லவென்றும் ஒரு நியாயஞ் சொல்லுகின்றார்கள். அதனையும் சற்று ஆராய்வோம்.

பிரபஞ்சத்திலுள்ள சகல ஜீவராசிகளுக்கும், பகுத்தறிவு என்பது அதனதன் பழக்க வழக்கத்தை யொட்டியே பெறப்படுகின்றன. மிருகங்கட்குக்கூட நம்மைப் போன்று பகுத்தறிவு இருப்பதாக பிரபல மிருக ஆராய்ச்சி வல்லுநராகிய திரு. டார்வின் அவர்கள் கூறியிருக்கிறார். உதாரணமாக நாய், கிளி, குரங்கு, நாகனவாய்ப்புள், இவைகளெல்லாம் மனித அறிவையை பெற்றிருக்கின்றன. சர்க்கஸ் காட்டுவோன் சிங்கம், புலி, கரடி, குதிரை இவைகளை வேண்டும்படி பழக்கி, அவைகள் அவன் சொல்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க,

கே. எம். பாலசுப்பிரமணியம்—சௌந்திரவல்லி.

திரும்பிப்பார்.

[ஸேமி]

இந்திய மனிதனே இது உனக்கு உன்னுடைய கடுமையான உறக்கத்தினின்றும் சற்று எழுந்து வெளியில் வா. இதோ பரந்த உலகத்தைப்பார் நீ இன்னும் பழய கொள்கைகளையே மூடப்பழக்க வழக்கங்களையே கெட்டியாக பிடித்துக் கொண்டிருப்பதனால் நீ முன்னுக்கு போக முடியாமல் நாளுக்கு நாள் பின்னேக்கி போய்க் கொண்டிருக்கிறாய். ஆனால் பழய மூடப்பழக்க வழக்கங்களை உதறித்தள்ளிய மற்றைய நாடுகள் உன் கண்முன்னால் எவ்வளவு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதை சிந்தித்துப் பார். நீயும் மற்றவர்களைப்போல் மனிதன் தான் என்பதைநிலைநிறுத்த வெளியில்வா. ஏன் எலும்புங்கூடுமாய், உண்ண உணவின்றி, கட்ட துணியன்றி, இருக்க இடமின்றி தவிக்கிறாய். தூங்கி எழுந்த உன் கண்களை சற்று கசக்கி உன் மூளைக்கு சிறிது வேலையைக்கொடுத்து நீ இருக்கும் நிலைக்கு காரணம் என்ன என்பதை சிந்தித்துப்பார். நேரான விடை பெறுவாய்.

வாலிபனே! உன்னைப் போன்ற மற்ற நாட்டுவாலிபர்கள் போய்க் கொண்டிருக்கும் வேகமென்ன. அவர்கள் செய்யும் அற்புத அற்புதமான வேலைகளென்ன? காம்பெல் [Gambell] தன்னுடைய மோட்டாரில் மணிக்கு 260 மைல் வேகம் ஓடினால், மற்றொருவன் அதைவிட வேகமாகப்போக முயலுகிறான். தந்தியில்லாமலும், காற்று வசதியின் மூலம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள தன் நண்பர்களுடன் அளவளாப்பேசுகிறான். தங்களுக்குள் ஒருவர் முகத்தை ஒருவர் அவ்வளவு தூரத்திலிருந்து கொண்டே பார்க்கின்றான். களியாட்டங்களை கண்டு களிப்புறுகிறான். இயற்கையைதன் இஷ்டப்படியாட்டுகிறான். இதுவரை திரையில் காட்டிக் கொண்டிருந்த பயாஸ்கோப்படக்காக்ஷியை திரையில்லாமலே மனிதர் நேரிலேயே நடிப்பது போல் காண்பிக்ககண்டு பிடித்து விட்டான். இன்னும் என்னென்னமோ. நீ மனத்தில் கூட நினைக்க முடியாத எத்தனையோ அற்புதங்களைச் செய்கிறான். நீ இவைகளைப்பார்த்து இவைகளெல்லாம் கண்கட்டு வித்தையோ, ஜாலமோ என்று எண்ணுகிறாய். ஆனால் அவன் உன் முதுகில் அறைந்து மடையா, இது கண்கட்டு வித்தையல்ல, ஜாலமல்ல, மூளையுள்ளவன் கண்டுபிடித்த அதிசயங்கள் என்கிறான். நீ அவன் செய்யும்காரியங்களைக்கண்டு வாயில் ஈநுழைய அண்ணாந்து பார்த்துக் கொண்டு நிற்கிறாயே. அவனும் உன்னைப்போல் மனிதன்தானே. அவன் மட்டும் உலகத்தில் இத்தனை அதிசயங்களுக்கும் காரணமான தலைவனேன்? இதனை சிந்தித்துப்பார். நீயும் அவனைப்போல் எல்லாகாரியங்களும்செய்ய ஆற்றலுள்ளவன் தானே, பின்னை ஏன் மயங்கிக்கிடந்து மடிந்து போகிறாய். உன் மூளையை வேதம் சாஸ்திரம், புராணம், கடவுள் கர்மம், கற்பக விருக்ஷம், மோக்ஷம், நரகம் முதலிய ஆதாரமற்றவார்த்தைகள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன, அவைகளை உதறித்தள்ளிப்போட்டு வெளியில் வந்தால் நீயும் சுதந்திர உலகில் உலாவலாம். அவைகளை உதறித்தள்ளுவதில் இப்பொழுது உனக்கு சிறிது கஷ்ட மேற்படலாம். ஆனால் அதனால் ஏற்படும் பலனை சுதந்திரத்தை எண்ணும்பொழுது இப்பொழுது உன்முன்னால் நிற்கும் கஷ்டங்கள் ஒரு பொருட்டல்ல. பெரியவர்களாயிருப்பவர்கள் உன் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாய் நிற்பார்கள், கடவுளென்பார்கள், கவலையில்லை என்று சொல்லு. மோக்ஷம் என்பார்கள், அது சுத்த மோசம் என்று நவிலு புராணம் என்பார்கள் பொய்க்கதை என்று புத்தி புகட்டு அதிகம் தடுத்தார்களேயானால் "ஐயா உங்கள் கடவுளையும் புராணத்தையும் மோட்சத்தையும் நீங்களே வைத்து கட்டிப்புரளுங்கள், அது உங்களுடனே மாண்டு மடிந்து மண்ணாய் போகட்டும், எங்கட்கும் அதற்கும் தொடர்பு வேண்டாம். எங்கள முற்போக்கின் வேலையில் நீங்கள் முட்டுக்கட்டையிட்டால் கட்டாயம் அவமானமடைவீர்கள். என்று சொல்லி வெளிக்கிளம்புங்கள். உங்களைப் போலவே வெளிக்கிளம்பி முன்னேற்றத்திற்காக உழைக்கும் வாலிபர்களோடு சேர்ந்து சுதந்திர மனிதர்களாய், வீரர்களாய் நில்லுங்கள்.

பெரியோர்களே! வைதிகர்களே! உலக முன்னேற்றத்திற்கு முக்கிய தடையாய் நிற்பது உங்களின் பாழடைந்த வைதீகமே என்பது தெற்றென விளங்கி விட்டது. சரியோ தப்போ, நம் நாட்டு வாலிபர்களெல்லாம் நாகரீகம் கற்றுக் கொண்டுவிட்டார்கள். முற்போக்கடைய முற்பட்டு விட்டார்கள். உங்களைக் கண்டு உங்கள் கர்நாடகத்தைக்கண்டு உங்கள் பின்னால் பரிகசிக்கிறார்கள். நேரத்தின் அருமையை உணருகிறார்கள். உங்களைப் போல் திண்ணை வேதாந்தம் பேசி காலம் கழிப்பவர்களைக் கண்டால், சோம்பேறிகள் பிறர் உழைப்பால் உண்ணும் அறக்கர்களென மதிக்கிறார்கள். ஆகையால் அவர்கள் வேலையில் நீங்கள் குறுக்கிட்டால் அவமானமடைவது நிச்சயம். ஆகையால் நீங்களும் கூடுமான வரையில் வைதிகத்தை விட்டு, பழய மூட பழக்கங்களை விட்டு, அநாசாரங்களை விட்டு அவர்களுக்கு துணை புரியுங்கள். அப்பொழுது நீங்களும் அவர்கள் பால் செல்வாக்கு பெறுவீர்கள், நல்ல பெரியோர்கள் என உலகோரால் மதிக்கப்படுவீர்கள். ஆகையால் வாலிப உலகிற்கு துணை புரியுங்கள்.

இரும்பு பெட்டகமே - இல்லை- பணக்காரனே! திரும்பிப்பார். இன்னும் ஏழைகளை எவ்வளவு நாளைக்கு கசக்கிப் பிழியலாமென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய், அந்த பாச்சா இனி பலிக்காது. ஏழைகள் தாங்கள் ஏன் ஏழைகளாயிருக்கிறோமென்பதை சிந்தித்து பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். சிந்தித்தால் யோசித்தால் வரும் விடை யாதாயிருக்கக் கூடும். ரஷ்ய தொழிலாளரை, ஏழை ஜனங்களை வாட்டி பிழிந்து கொண்டிருந்த ஜார் குடும்பத்தினர் கதி யாதாயிற்று? முதலாளிகள் ஆதிக்கம் இருந்த இடம் எங்கே? அவைகளைப்புதைத்த இடத்தில் புல்முளைத்துபோயினவே. உன் நாட்டு ஏழைகளும் ஒரு முகமாக தங்களின் கஷ்டங்களை தீர்க்க எண்ணுங்காலத்தில் உங்களுடைய பணக்காரத்தன்மை எங்கு போய் நிற்கும்? ஆகையால் பணக்காரனே சிறிது புத்தியுள்ளவனாக நடந்து கொள். பணத்தை பாழ் பண்ணாதே, இந்நாட்டில் உனக்கு உழைத்த பல்லாயிர மக்கள் இருக்க இடமில்லாமல் தவித்துக் கொண்டிருக்க, கல்விக்கிரகங்களுக்காக பெரிய பெரியகோவில்களை கட்டாதே. உன் பணத்தைக் கொண்டு கல்விக்கழகங்களையும்வைத்தியசாலைகளையும் உண்டாக்கிவை. ஏழை மக்கள் அதனைப் போற்றுவார்கள். பாலில்லாத குழந்தைகள் பலநூறு இங்கு தவித்துக் கொண்டிருக்க கல்லின் மேலும், செம்பின் மேலும் குடம் குடமாய் பாலைக் கொட்டாதே. குழந்தை விடுதிகளை உண்டாக்கி பாலிக்காக் குழந்தைகளுக்கு பாலும், உடையும் கிடைக்கச் செய். வெறும் ஆர்பாட்டமான தேர், திருவிழா, உற்சவங்களுக்காக செலவிடும் உன் பொருளை—இல்லை, ஏழைகளால் சம்பாதிக்கப்பட்டு அவர்களை ஏமாற்றி கருடன்போல் பிடுங்க வைத்திருக்கும் பொருளை ஏழைகளின் முன்னேற்றத்திற்காக செலவிடு. அப்பொழுது ஏழைகள் உன்னைப் போற்றுவார்கள். இல்லையேல் அரசர் அல்பான்சோவின்கதிதான் தெரியுமா?

காங்கிரஸ்காரர்களே! நாட்டு முன்னேற்றத்திற்காக உழைப்பதாக பேர் பூண்டு, பாமர மக்களை ஏமாற்றி, வைதீகத்துக்கும், வருணாச்சிரமத்துக்கும், முதலாளி தத்துவத்திற்கும் ஆதரவளிக்க பாடுபடாதீர்கள். காந்தி, கதர் என்னும் உங்கள் மயக்கு வார்த்தைகளுக்கும், பகிஷ்காரம் சட்ட மறுப்பு என்னும் உங்கள் சண்டித்தனத்திற்கும், இனி உலகம் பயப்படப்போவதில்லை. உங்களுடைய குட்டை உங்களிலேயே பலர் வெளிப்படுத்திவிட்டார்கள். ஆகையால் இனியும் ஏமாற்றப்பார்க்காதீர்கள். ஏமாந்தகாலம் மலையேறிவிட்டது. உண்மையான சமூக விடுதலைக்கு உழையுங்கள் மதக்கட்டுப்பாட்டை உடைத்தெறியுங்கள். ராமராஜ்யத்தை துச்சமென பறைசாற்றுங்கள், தீண்டாமைப்பேயை அகற்றுங்கள், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம் என்பதை எல்லோருக்கும் எடுத்தோதுங்கள், எல்லாம்செயலில் செய்யுங்கள். காங்கிரசிலிருந்து கொண்டு இவைகளையெல்லாம் செய்யமுடியவில்லையென்றால் உதறித் தள்ளிவிட்டு வெளியில்வாருங்கள். சுயமரியாதை இயக்கம் உங்களை அன்புடன் தழுவுகிறது. அதுவில்லாமல் காங்கிரஸ் போர்வையை இனியும் போர்த்துக்கொண்டு, இனியும் ஏமாற்றப்பார்த்தால் நீங்கள் அவமானமடைவது நிச்சயம்! நிச்சயம்!! முக்காலும் நிச்சயம்.

சகோதரிகளே! முடிவில் உங்களுக்கும் ஒருவார்த்தை. இன்னும் "அடுப்பே மோக்ஷம் ஆம்படையானே குலதெய்வம்" என்று அடுப்பங்கரையில் உட்கார்ந்து அடிமையில் கிடக்காதீர்கள். எழுந்துவாருங்கள், இதோ ஆமிஜான்சன் என்னும் இளநங்கையைப்பாருங்கள், இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு தன்னுடைய ஆகாயவிமானத்தில் ஒண்டியாய்ப்பறக்கும் அருமையைப்பாருங்கள், அவளும் உங்களைப்போல் பெண்தான் என்பதை உணருங்கள், வெறும் புராணக்கதைகளை நம்பி நம்பி மோசம் போகாதீர்கள். ஆண்கள் தொட்டதற்கெல்லாம் உங்கள்மேல்தான் பழிபோடுகிறார்கள் 'என்னையா செய்கிறது திவசம் செய்யக்கூடாது என்றிருந்தேன். ஆனால் பெண்கள் தொந்திரவு அதிகமாயிருக்கிறது.' என்று சொல்லுகிறார்கள், அந்தப்பழிகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளாதீர்கள், திவசத்துக்கு செலவிடும் தொகையை குழந்தைகளின் கல்வியில் செலவு செய்ய புருஷர்களுக்கு புத்தி புகட்டுங்கள். அனாவசிய சடங்குகளுக்கு இடம்கொடுக்காதீர்கள். உங்கள் குழந்தைகளை கடவுள் பேய் பிசாசு சாமி என்று பயம்காட்டிக்கொள்ளாதீர்கள். நீங்களும் மனிதப் பிறவி என்று எண்ணுங்கள். ஆண்கள்உங்களை அடிமைகளாக பாவித்தால் கன்னத்தில் இரண்டு அறை பளீர் பளீர் என்று கொடுத்து மதிகெட்ட மனிதனே நாங்களும் மனிதர்கள்தான், என்பதை அந்தமடையன் உணரும்படிசெய்யுங்கள். நாட்டு விடுதலைஉங்களிடம்தான் இருக்கிறது. நீங்கள் முன்னேறிவிட்டால் அப்புறம் புருஷர்களைப்பற்றிய கவலையில்லை. ஆகையால் சகோதரிகளே. அடிமைத்தளையை அகற்றி

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

(Scientific Method and Ignorant Beliefs.)

மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

—:0:—

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(2)

முன் எழுதிய வியாசத்தில் மெஞ்ஞான முறையின் லட்சணங்களாகிய "பார்த்தல்" "பரீட்சித்தல்" இவை இரண்டின் பிரயோகத்தைக் குறித்துஅநேகம்வுரைத்தோம்.இவை இரண்டுகளுக்கு உட்படாத, அல்லது இடங்கொடாத நம்பிக்கைகள் மூட நம்பிக்கையெனவும் விளங்கக்காட்டினோம். பல மூடநம்பிக்கைகளில் நமது நாட்டில் பாம்பைப்பற்றிய பல நம்பிக்கைகள் வழங்கி வருகின்றன. இதனை விஞ்ஞான முகத்தானே சற்று தெளிவாக விசாரிப்பாம்.

Snake Cult அதாவது பாம்பைத் தொழுதல், புராதனபழக்கமாகும். வேதகாலங்தொடங்கி, பாம்பை பூஜித்துவந்ததாகத்தெரிகிறது. பாம்பைப் பற்றி எழுதியுள்ள கதைகள்பல. பல ஆண்டுகளாக, பல தேசங்களில், பாம்பை பல Tribes, பல சாதியார் பலவிதமாகப் பூசித்து வந்திருக்கின்றனர். வாசுகி என்ற பாம்பைக்கொண்டு திருப்பாற்கடலில் அமுதத்தை திரட்டியதாக ஒரு பழங்கதை வேதகால முதல் வழங்கப்பட்டு வருகின்றது. ஆயிரந்தலையுடைய பாம்பாகிய ஆதிசேடன் பூமியைத்தாங்கி வருவதாகவும் ஓர் புராணக்கதைஉண்டு. புத்தர் கொடிய பாம்புவொன்றின் கோபத்தை அடக்கியதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. கிருஷ்ணன் காளிங்கனென்ற பாம்பின் பேரில் நடனம் செய்ததாகவும் பாகவதக் கதை ஒன்றுண்டு. இதைப்போன்ற கதை, பல தேசங்களிலும் வழங்கி வந்திருப்பதைக்காணலாம்.

விவிலிய நூலில் (The Bible] சாத்தான் (Satan) பாம்பின் வடிவெடுத்து ஈவை [Eve] மயக்கியதாகவும் கதையைப்படிக்கலாம் பாம்பை பூசிப்பதை நமது தேசத்தில் எங்கும் காணலாம், பாம்புகள் வசிக்கும் செல்லுப்பூச்சி அல்லது இரம்பு கட்டிய புத்துகளில் பால் வார்க்கும் வழக்கம் அதிகமாகவே காணப்படும். பாம்புப்புத்துகளை கற்பூரசாம்பிராணியுடன் பூசிப்பதையும் காணலாம். இவ்விதமாக பாம்பை நமதுதேசத்தில் நிவேதனத்துடன்(Sacredness) தொழுதுவரும் பழக்கம் மிகவும் பழமையான பழக்கம் என அறிய வேண்டும். இதற்குக்காரணமென்ன?

பாம்பு (Snake] ஊருகிறபிராணிகளில் ஒன்று. ஊருகிறபிராணிகளில் [Reptiles) நால்வகையுண்டு. அவ்வகைளாவன லிசர்ட்ஸ் [Lyzards] எனும் ஓணான் பல்லிவகை ஒபிலியா [Ophelia] எனும் பாம்புவகை, கிராகோடிலியா [Crokodelia) என்ற முதலை வகை, கிலோனியா [Chelonia] எனும் ஆமைவகை ஆக நான்கு வகை, இந்நான்கில் பாம்பு ஒருவகை. இந்நான்குவகைகளும் ஒன்றுக்கொன்று கட்டடத்திலும் (Structure] அவயவத்திலும், கரு அமைப்பிலும், ஒன்றே. இந்நான்கு வகைகளும் ஒருகாலத்தில் ஓர் இனமாக இருந்ததாக யூகிக்கப்படுகிறது, பாம்பை கட்செவியன் என்று நமது கவிஞர்கள் சொல்வது அறியாமையால் என அறிக. மற்ற ஊர்வனங்களுக்கு கண்ணும், காதும், தனித்தனியாக இருப்பது போல் பாம்புக்கு கண்ணுமுண்டு, காதுமுண்டு. நமது கவிஞர்களுக்கு 'பார்த்தல்" (Observation), இல்லாமையால் பாம்பு கண்ணால் கேட்கின்றதாக சொல்லுகின்றார்கள்! இதுமுற்றிலும்தங்கள் அறியாமையைக்காட்டுகிறது. பாம்பின்காது அதன் செதிளில் Scales மறைந்திருக்கிறது. பாம்புகளுக்கு கால்கள் முற்றிலும் இல்லை என்று சொல்லலாகாது. கால்களும் பாம்பின் தோலுக்குள் மறைந்து கிடக்கக்காணலாம். பாம்பு தவழும் பிராணியாய் பரிணமித்தபடியால் Evolved கால்கள் உபயோகமற்றுப்போய் குறைந்துவிட்டன. ஆனால் முன்னிருந்த கால்களின் அடையாளங்கள் (இரண்டு துண்டு எலும்புகளை மாத்திரம்) பாம்பின் வயிர்புறம் மறைந்திருக்கிறது. நமது கேள்வி என்னவெனில் ஊர்வனங்களில், அதாவது ஓணான், பல்லி, முதலை, ஆமை முதலிய ஜந்துக்களில் ஒன்றாகிய பாம்புக்கு மனிதர் ஏன் இவ்வளவு பயந்து நடக்கின்றார்கள்என்பதுதான்கேள்வி. பாம்பைக்கும்பிடும் நாகர்கள் என்ற ஓர் பிரத்தியேக ஜாதியார் ஒரு காலத்தில் இருந்ததாகவும் தெரிகிறது. பாம்பை வணங்கும் பழக்கம் எந்தக் காலத்திலும், நமது இந்தியாவில் வழங்கி வந்ததாகவும் தெரிகிறது Serpent cult or Snake cult, என்ற பாம்பு ஆகமம் ஒரு காலத்தில் உலக முழுமையுமே பரவியிருந்து வந்ததாகவும் தெரிகிறது. இவ்வளவு பிரக்கியாதி இந்த பாம்பு வகைக்கு மாத்திரம் மனிதர் வாழ்க்கையில் வந்தது எவ்விதம்?

"பாம்பைக்கண்டால் படையும் நடுங்கும்" என்ற வதந்தி ஒன்றுண்டு. இதுதான் இந்த பாம்புக்குள்ள மகத்துவம். எல்லா மதங்களும், ஆகமங்களும், பூசை, நைவேதனங்களும், ஆடு, மாடு, கோழி பலியிடுவதும் தேங்காயையும் தாம்பூலாதிகளையும் நிவேதிப்பதும், பயத்தால் (Fear) உண்டானவை என அறிக. பாம்பின் பயம் உலக முழுமையே பரவியுள்ளது. அங்கும் இங்கும் எங்கும் வாழும் இந்த ஜீவன், ஒரு சந்தடியும் செய்யாமல் தீண்டின மாத்திரத்தில், மனிதன் சாகின்றபடியால் இதைவிட என்ன பயம் வேண்டும். மனிதர் உள்ளத்தில், பாம்பு இவ்வளவு விசேஷம் பெற்றதற்குக்காரணம், இந்த பயமே! அகில இந்திய மரண விகித கணக்குப்படி (All India Mortality Statistics) பாம்பால் கடிபட்டு, வருஷா வருஷம், நமது இந்திய நாட்டில் சாகின்றவர்கள 6000 பேராம்!! இந்த பயத்தால் தான் பாம்புக்குப் பூசை இடுவதும், பால் ஊற்றுவதும், கடவுளுக்கும் பாம்பை காவல் வைப்பதென அறிக. ரங்கநாதருக்கு பாம்பு முடியில் காவல் வைக்கப்பட்டிருக்கிறது! அம்மன், பிடாரி கோயில்களில்,சிலைகளுக்குத்தலையில், பணமுடி வைத்திருக்கிறது!! பாம்புக்கு அநேக கோயில்களும் கட்டப்பட்டுள்ளன. இவ்வளவு ஆர்பாட்டங்கள் பாம்புக்குச் செய்து வந்தும், அதன் கொடுமை ஒழிந்தபாடில்லை. பாம்பு கடிக்குத் தகுதியான மருந்து கண்டுபிடித்தபாடில்லை. பாம்பின் விஷம் இன்ன வஸ்துக்களை, இன்ன அளவில் கொண்டுளது என்று வகுத்தறிய [Analysis] முடியவில்லை. Medical Science, தற்கால விஞ்ஞான வைத்தியம், பாம்பின் விஷத்தை அறிந்து அதற்குத் தகுதியான மருந்து கண்டு பிடிக்கவில்லை என்றால், பண்டை காலத்தில் இருந்து வந்த அறியாமையை சொல்லவும் வேண்டுமோ? இந்த அறியாமையால் தான், பாம்பு கடிக்கு மந்திரம் ஓர் முறையென்று நாளது வரை நமது பாமர மக்கள் எண்ணி வருவது. ஆதிகால முதல் எந்தெந்த நோய்களுக்கு காரணங்கள் தெரியவில்லையோ, அந்தந்த நோய்களுக்கு மந்திரங்கள் மேல் நம்பிக்கை ஏற்பட்டது. மந்திரமென்றால் என்ன? மந்திரம் என்பது சில சொற்களே! எல்லா சொற்களே மந்திரத்தில் அடங்கியுள்ளது. இந்த சொற்களுக்கு மாத்திரம், இவ்வளவு செல்வாக்கு வந்ததேன்? இதுவும் நம்பிக்கையே [Faith] நம்பிக்கை இல்லாத சொற்கள் வெறுஞ் சொல்லென அறிக. அந்த சொற்களில் ஏதோ மகத்துவம் உளதாக எண்ண வந்தவுடன், அவைகளுக்கு மனிதர் உள்ளத்தில் நிவேதனம் [Sacredness] அடைகின்றன. இது தான் மந்திர சொற்களுக்கும், மற்ற சொற்களுக்கும் உள்ள வித்தியாசம். மந்திரத்தால் ஆவது ஒன்றுமில்லை. "மந்திரத்தால் மாங்காய் விழுமா" என்ற நாஸ்திகர் பாடமும் இதுவே. அறியாமையால், பாமர மக்கள் மந்திரம், மந்திரம் என்று மயங்குகின்றார்கள். அறியாமையை வளர்க்கவே மந்திரங்கள் கற்பிக்கப்படுகின்றன, இந்த பித்தலாட்டம், வேதத்திலேயேவுண்டு. "ஓம்" என்ற சொல், மற்ற சொற்களைப்போன்ற சொல்லேயொழிய வேறில்லை. "வா" "போ" என்ற சொற்களைவிட, 'ஓம்' என்பதற்கு விசேடம் ஒன்றுமில்லை. ஆனால் அந்த சொல்லுக்கு மாத்திரம் ஏன் அவ்வளவு விசேடங்கள் வேத நூல்களில் கொடுத்துள்ளார்? ஏனெனில், பாமர மக்களை மிரட்டுவதற்கென அறிக "ஆம்" "ஓம்" சாதாரண சொற்களே. ஆனால், அதனை உச்சரிப்பதில் ஒரு பயத்தை உண்டாகும்படி உச்சரிக்கின்றார்கள். சொற்களால் பயத்தை உண்டாக்கலாம். உறத்துச் சொல்வதாலும், அல்லது கேட்கப்படாமல் வாயிற்குள்ளவே சொல்வதாலும், பயத்தை உண்டாக்கலாம் எல்லா மகத்துவமும் பயத்தால் உணடானவைகளே. இந்த சொற்களை உச்சரிக்கும் விதங்களால் பாமர மக்களை பயப்படும்படி செய்வதால், அதிலிருந்து எல்லா நம்பிக்கையும், மகத்துவமும் உண்டாகின்றன. சந்தியா வந்தனமென்று வழங்கும் காயத்திரி ஜபத்தில் அடங்கிய சொற்கள், எல்லாச் சொற்களைப் போன்றவைகளே. ஆனால், அச்சொற்களை யார் காதுக்கும் படாமல், குளக்கரையிலோ, நதிக்கரையிலோ அஸ்தமான சமயத்தில், சூர்யனை நோக்கி, கையும் காலும் அசைவற்று சொல்வதால், அந்த சொற்களுக்கு வந்துள்ள புண்ணியங்க ளெல்லாமென அறிக. இவைகளோடு இதனை உபயோகிக்கும் பிராமணர்கள், மற்ற ஜாதியாருக்குக் கற்பிக்காமலே வந்திருத்தலும், ரகசியமாக இந்த சொற்களை வைத்து பாமர மக்களை மயக்குவதற்கென அறிக.

இந்த காயத்திரி ஜபம் சாதாரண ஜபமாகும். இது சூர்யனைக்குறித்து பஜிக்கும் அதாவது பிரார்த்திக்கும் ஜபமாகும். ஆதி மனிதன் சூர்யன் உதயத்தைப் பார்த்து, ஆச்சரியத்துடன் சொல்லும் சொற்களாகும். உதயத்தில் பட்சிகள் பாடுகின்றன, மயில்கள் ஆடுகின்றன. உறங்கிக் கிடந்த உலகமே ஒரு குதூகலத்தை அடைகின்றது, சீவராசிகளும் சூர்ய உதயத்தைக் கண்டதும் மனக்க

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.

குடி அரசு.

ஈரோடு 1932 ஜூலை மீ 10-உ

ஏழைகளுக்கு நன்மையில்லை.

—:0:—

இக்காலத்தில் எங்கு பார்த்தாலும் பணமில்லாத காரணத்தால் மக்கள் படும் துன்பம் சொல்லமுடியாததாக இருக்கின்றது. இன்னார் கஷ்டப்படுகின்றார்கள்; இன்னார் கஷ்டப்படாமலிருக்கிறார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஏழை முதல் பணக்காரன்வரை ஆண்டி முதல் அரசன்வரை எல்லோரும் பொருளாதார நெருக்கடியால் இன்னது செய்வதென்று தோன்றாமல் திக்குமுக்காடுகின்றார்கள். நமது நாட்டு மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர்பரம ஏழைகள் என்பது தெரிந்த விஷயம். இத்தகைய ஏழைமக்கள் உணவுக்கும், உடைக்கும், உறைவிடத்திற்கும், படுந்துன்பம் இவ்வளவு அவ்வளவு என்று யாராலும் குறித்துரைக்க முடியாது. இந்நாட்டில் பிழைப்பில்லாமல் பெண்டு பிள்ளைகள், உற்றார் உறவினர் எல்லோரையும் விட்டுவிட்டு கடல்கடந்து அன்னியநாடு சென்று கூலிவேலை செய்யும் மக்களில் இந்தியரே அதிகமானவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இப்படிப்பட்ட கூலிகளுக்குக்கூட அன்னியநாடுகளிலும் பிழைப்பு இல்லாமல் ஒவ்வொரு வாரமும் ஆயிரக்கணக்கான மக்கள் திரும்பிவந்துகொண்டிருக்கின்றனர். இவர்கள் பெண்டு பிள்ளைகளுடன், வறுமையின் கொடுமையினால் பல பிணிகளுக்கும் ஆளாகி இரத்தக்கண்ணீர் வடிக்கின்றார்கள். நாட்டின் தலைவர்கள் என்பவர்களும், பணக்காரர்களும், படிப்பாளிகளும் இத்தகைய ஏழைமக்களின் துயரைப் போக்க ஒருவழியும் செய்யக் கவலையெடுத்துக்கொள்ளக் காணோம்.

வெள்ளைக்காரர்களின் அரசாட்சியை யொழித்து இந்தியர்களுடைய சுயராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு 'காங்கிரஸ்' சட்டமறுப்பு இயக்கத்தை வருஷக்கணக்காக நடத்திக்கொண்டு வருகிறது. சுயராஜ்ய ஆவேசங்கொண்ட வாலிபர்களும், நடுத்தர வயதுள்ளவர்களும், காங்கிரசின் பேராலும், சட்டமறுப்பின் பேராலும் ஜெயிலுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். சட்டமறுப்பின் பெயரால் இவர்கள் செய்யும் காரியங்கள் இன்னவையென்பது வாசகர்களுக்குத்தெரியாத விஷயம் அல்ல. இந்தச் சட்டமறுப்பால் அரசாங்கத்திற்கும் கஷ்டமும், நஷ்டமும் உண்டாவதைப்பற்றி நமக்குக்கவலையில்லை. ஆனால் பொதுஜனங்களுக்கும் பல கஷ்டங்களையும், நஷ்டங்களையும் சட்டமறுப்பு இயக்கம் உண்டாக்கிக்கொண்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தச்சட்டமறுப்பு இயக்கத்தை அடக்கும்பொருட்டு அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியினாலும் பொதுஜனங்களுக்குக் கஷ்டம் உண்டாகாமற்போகவில்லை. சட்டமறுப்புக்கைதிகளாக ஆயிரக்கணக்கான மக்களைச்சிறையிலடைத்துக்கொண்டு அவர்களுக்குச்சோறுபோட்டு வருகிறார்கள். இன்னும் சட்டமறுப்பைச்சமாளிக்கும் பொருட்டு விசேஷ போலீசாரையும், மற்றும் பல உத்தியோகஸ்தர்களையும் ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே இவைபோன்ற காரியங்களுக்குச் செலவாகும் பணமெல்லாம் பொதுமக்கள் தலையிலேயே விடிகின்றது. இதன்மூலம் ஏழைகள் படும் துயரை அளவிட்டுக்கூற முடியுமா? இது நிற்க,

படித்த கூட்டத்தினர்க்கு ஏழைமக்களிடம் எள்ளளவும் அனுதாபமிருப்பதில்லை. அவர்கள் எப்பொழுதும் பட்டம்பதவி முதலியவைகளைப்பெற்று அச்செல்வாக்கைக்கொண்டு ஏழைமக்களின் இரத்தத்தை உறிஞ்சி, தாங்கள் மாத்திரம் சௌக்கியமாக வாழ்வதிலேயே குறிப்பாய் இருப்பவர்கள். இவர்களைப்போலவே தான் பணக்காரர்களும், ஏழைமக்கள்பால் சிறிதும் இரக்கமில்லாமல் தமது நன்மைக்கான காரியங்களிலேயே கவனத்தைச்செலுத்தி வருகின்றவர்களாயிருக்கின்றார்கள். இந்தப்படித்தவர்களுடைய தயவும், பணக்காரர்களுடைய தயவும் இன்றேல் அரசாங்கமும் நாட்டில் தங்கள் விருப்பப்படி ஆண்டுகொண்டிருக்க முடியாது. ஆகையால் இவ்விரு கூட்டத்தாரையும் திருப்தி செய்விக்க வேண்டிய நிர்ப்பந்தம் எப்பொழுதுமே அரசாங்கத்திற்கு உண்டு. ஆகையால் அரசாங்கத்தார், படித்தவர்கள், பணக்காரர்கள் ஆகியவர்களின் செல்வாக்கும், ஆதிக்கமும் மேலும் மேலும் வளர்ச்சியடைவதற்குத் தகுந்த முறையில் "சுயராஜ்யம்" என்னும் பெயரினால் அரசியல் சீர்திருத்தம் வழங்கி வருகின்றனர்.

இந்தச் சீர்திருத்தத்தின் மூலம் கிடைக்கும் லாபங்களைப் பங்கு போட்டுக்கொள்ளும் விஷயமாக படித்தவர்களுக்குள்ளும், பணக்காரர்களுக்குள்ளும் உண்டாகி இருக்கும் கட்சிகள் பல. இக்கட்சியைச் சேர்ந்தவர்கள் தேர்தல்களில் வெற்றி பெறும் பொருட்டுச் செய்யும் ஆர்ப்பாட்டங்கள் பல. பிராமணர் கட்சி, அல்லாதார் கட்சி, முஸ்லிம்கட்சி, சீக்கியர்கட்சி, தாழ்த்தப்பட்டோர் கட்சி, கிறிஸ்தவர் கட்சி என வகுப்பின் பேராலும் மதத்தின் பேராலும் உண்டாயிருக்கும் கட்சிகள் பல. இக்கட்சிகளில் பிராமணருக்குள், காங்கிரஸ் பிராமணர், மிதவாதப் பிராமணர், சுதேசிப் பிராமணர், சநாதன தருமப்பிராமணர் எனப் பலவேறு கட்சிகள்இருக்கின்றன. பிராமணரல்லாதார்க் குள்ளும், இதுபோலவே, தேசிய பார்ப்பனரல்லாதார், சுயேச்சைப்பார்ப்பனரல்லாதார் எனப் பலவகைக் கட்சிகள் இருக்கின்றன. முஸ்லீம்களுக்குள்ளேயும், மௌலானா ஷௌகத்அலி கட்சி, சர். முகமது இக்பால் கட்சி, மௌலானா ஹசரத் மோகினி கட்சி, தேசிய முஸ்லிம் கட்சி எனப்பல பிரிவுகளிருக்கின்றன. தாழ்த்தப் பட்டவர்களுக்குள், திருவாளர்கள், அம்பேட்கார், சீனிவாசன் கட்சி, திருவாளர்கள் மூஞ்சே ராஜா ஒப்பந்தக் கட்சி எனப்பிரிவுகளிருக்கின்றன. இவ்வாறே ஒவ்வொரு வகுப்புக் கட்சிக்குள்ளும் உட்பிரிவுக் கட்சிகள் பல இருந்து வருகின்றன. இப்பிரிவுகளும், கட்சிகளும் தோன்றியிருப்பதன் நோக்கம், சீர்திருத்தத்தில் பட்டம் பதவி பெறுவதையன்றி வேறில்லையென்பதில் ஐயமில்லை. இந்தக் கட்சிகளில் ஒன்றேனும், அரசியல்திட்டத்தில் மதப் பாதுகாப்பும், பணக்கார நிலச்சுவான்தார் பாதுகாப்பும் இருக்கக் கூடாது என்பது பற்றிப் போராடாத ஒரு காரணத்தைக் கொண்டே இவையெல்லாம், படித்தவர்களின் நன்மைக்காகவும், பணக்காரர்களின் ஆதிக்கத்திற்காகவும் சிருஷ்டிக்கப் பட்ட கட்சிகளேயொழிய ஏழை மக்களின் நன்மைக்காகச் சிருஷ்டிக்கப் பட்டவைகள் அல்லவென்பதை உணரலாம்.

இன்னும் அரசியல்காரணமாகவும், மதம் காரணமாகவும், தேசத்தில் ஒருவகுப்போடு ஒரு வகுப்பும், ஒரு மதத்தோடு ஒரு மதமும் சதா கலகம் விளைத்துக்கொண்டிருப்பதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எந்தக் கட்சியினரும் செய்ய முன் வரவில்லை. இவ்விஷயத்தில் யாரும் கவலைகொண்டிருக்கிறார்கள் என்று கூடச் சொல்ல முடியவில்லை.

உதாரணமாக இப்பொழுது பம்பாய் நகரத்தில் நடைபெறும் இந்து முஸ்லீம் கலக சம்பந்தமான செய்திகள் நமது மனத்தைக் கலக்குகின்றன. அங்கு, இந்துக்களிலும், முஸ்லிம்களிலும் நிரபராதிகள் படும் துன்பத்தைக் கேட்கும் எவரும் இரத்தக் கண்ணீர் வடியாமலிரார். கடைகள் கொள்ளை போகின்றன; தீக்கு இரையாக்கப் படுகின்றன; பலர் கொல்லப் படுகின்றார்கள்; எண்ணற்றவர்கள் காயமடைகின்றார்கள்; அபலைகளான பெண் மக்களும் கூட அவமானமும், அடியும் படுகிறார்களென்றால் இதை விட இன்னும் வேறு என்ன வேண்டும். மசூதிகளும், கோயில்களும் தாக்கப் படுகின்றன. இவைகள் தாக்கப்படுவதில் நமக்குச் சிறிதும் கவலையில்லை. இதன் மூலம் இன்னும் கலகம் வலுத்து வருகிறதென்பதைப் பற்றியே கவலைப் படுகிறோம். உண்மையில் இக்கலகம் உண்டாவதற்கு முதலில் அரசியல் காரணமாக இருந்தாலும், வர வர இக்கலகம் மதச் சண்டையாகவே முற்றி விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆகவே உண்மையில் இது போன்ற வகுப்புக் கலகங்களும், மதச்சண்டைகளும் ஒழிய வேண்டுமானால், மதப்பாதுகாப்பும், ஜாதி நாகரிகப் பாது காப்பும், நிலச்சுவான்தார், பணக்காரர்களுக்குப் பாது காப்பும் உள்ள அரசியல் சீர்திருத்தத்தால் ஒழியுமா? என்று தான் கேட்கிறோம்.

ஏழை மக்களின் வறுமையைப் போக்குவதற்கு முயலாமலும், கவலை கொள்ளாமலும், ஜாதி மதச் சண்டைகளை ஒழித்துச் சமாதானத்தை உண்டாக்க வழி தேடாமலும், இருந்து கொண்டு, வீணே, "ஐக்கிய ஆட்சி" "மாகாண சுய ஆட்சி" "குடியேற்ற நாட்டு ஆட்சி" "சுயராஜ்யம்" என்று பட்டம் பதவிகளுக்காக வேண்டிக் கூச்சலிடும் அரசியல் கட்சிகளால் நாட்டுக்கு

என்ன நன்மை யுண்டாகுமென்று கேட்கிறோம்.

ஆகையால் பொது ஜனங்கள், எந்த அரசியல் கட்சிக்காரர்களை நம்பினாலும் நன்மையடையப் போவதில்லை யென்பது நிச்சயம். ஜாதிப் பிரிவுகளுக்கும், உயர்வு தாழ்வுகளுக்கும், ஏழை பணக்காரத் தன்மைகளுக்கும் காரணமாக இருக்கும், மதத்திற்கு ஆதரவளிக்கும் எக்கட்சியினாலும் நாட்டுக்குக் கடுகளவும் நன்மை செய்ய முடியாது என்று எச்சரிக்கை செய்கின்றோம். மதமும், மதப்பாதுகாப்பும் நிலைத்து நிற்கும் வரையிலும், வகுப்புச் சண்டைகளும், மதச்சண்டைகளும் ஒழியப் போவது இல்லை யென்பது நிச்சயம். ஆகையால், முதலில் மதத்தையும், அதன் மூலம் உண்டான மூட நம்பிக்கைகளையும் ஒழிக்க வேண்டியதே உண்மையான தேசாபிமானிகளின் கடமையாகும். இதை விட்டுவிட்டு வீணைகச் "சுயராஜ்யம்" "சுதந்திரம்" "விடுதலை" "சமத்துவம்" என்று கூச்சலிடுவதெல்லாம், பொது ஜனங்களை ஏமாற்றும் பொருட்டே என்பதை மீண்டும் கூறி எச்சரிக்கின்றோம்.

இராமநாதபுரம் ஜில்லா
இரண்டாவது
சுயமரியாதை மகாநாடு.

நாளது 17-7-32 தேதி ஞாயிற்றுக்கிழமை காரைக்குடியில் நடைபெறும்.

புதுவை—பிரஞ் இந்திய அரசாங்க அமைச்சர்

தோழர் A. V. முத்தையா பி. ஏ.

அவர்கள் தலைமை வகிக்க அன்புடன் ஒப்பியுள்ளார்கள்.

மகாநாட்டிற்கு கீழ்கண்ட தோழர்கள் வருமாறு அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். தோழர்களான சென்னை எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்., எஸ். குருசாமி பி. ஏ., பி. தாவுத்ஷா பி. ஏ. "தாருல் இஸ்லாம்" ஆசிரியர், டி.. வி. சுப்பிரமணியம் "திராவிடன்" ஆசிரியர், கே. முத்துசாமி வல்லத்தரசு பி. எ. பி. எல்., திருமதி எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி., ஈரோடு ஏ. இரத்தினசபாபதி, திருமதி ஆர். அன்னபூரணி, திருமதி ஈ. வெ. ரா. நாகம்மாள், திருமதி சிவகாமி, சாமி. சிதம்பரனார், திருச்சி டி. வி. சோமசுந்திரம் பி. ஏ. பி. எல்., கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்., ஊ. பு. அ. சௌந்திரபாண்டியம் எம். எல். சி., வைசு. ஷண்முகம் முதலியவர்களாகும்.

மற்றும நமது இயக்கத்தோழர்கள் பலர் மகாநாட்டில் கலந்து கொள்ள இசைந்துள்ளார்கள்.

மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தார் மகாநாட்டிற்கான எல்லா முயற்சிகளும் செய்து வருகின்றார்கள். மகாநாட்டுப் பிரதிநிதிகட்குத் தக்க வசதிகள் செய்யப்பட்டு வருகின்றது.

ராம. சின்னையா
அ. போன்னம்பலம்
ராம. சுப்பையா
கரு. மே. இராமசாமி.
பொதுக்காரியதரிசிகள்

திருநெல்வேலி தேர் விபத்து

நெல்லையப்பர் அருள் சுரந்தார்.

சுவாமி நெல்லையப்பர் ஆலய ஆனித்தேர் உற்சவ சம்பந்தமாய் 17உ மாலை ஓர் பயங்கர சம்பவமேற் பட்டது. கிழக்கு ரத வீதியில் தேரை இழுக்கையில் திடீரென தேர் இடது புறத்திலிருந்து வலது பக்கமிருந்த வீட்டின் திண்ணைமீது மோதியது.

இதனால் அவ்வீட்டின்மாடி கொஞ்சமிடிந்தது. வீட்டின் முன்புறமிருந்த தகருங்கல் விளக்குத் தூண் இரண்டாகி பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஓர் வாலிபர் மீது விழவே அவருக்கு படுகாயம் பட்டது. ஆஸ்பத்திரிக்கு அவரை எடுத்துச் செல்லுகையில் அவர் மாண்டார். திண்ணையில் நின்று கொண்டிருந்த பலர் கதிகலங்கி, திண்ணையிலிருந்து கீழே குதித்து தேரின் சக்கரத்தின் முன் சிக்கினர்.

சம்பவம் நடந்த இடத்திற்கு சமீபத்தில் நின்று கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. தோத்தாத்ரி அய்யங்கார் தப்பினர். கீழே விழுந்த ஜனங்களை ஒவ்வொருவராக இன்ஸ்பெக்டர் தூக்கி காப்பாற்றினர்.

தேர் முன் சக்கரத்தில் 25 வயதுள்ள ஓர் பெண்ணின் கால் அகப்பட்டுக்கொண்டது. 'ஹைடிராலிக் ஜாக்' மெஷின் கொணர்ந்து சக்கரத்தை சற்று மேலே தூக்கி, பெண்ணை மீட்பதற்கு சுமார் ஒரு மணி நேரத்திற்குமேல் ஆகியது.

(ஒன்று மறியாத கூட்டத்தில் வேடிக்கை பார்த்து நின்ற ஒரு வாலிபர் உயிர் துறக்க நேர்ந்ததும், இன்ஸ்பெக்டர் உயிர் தப்பியதும் பாரபட்சமற்ற நெல்லையப்பரின் அருள் நோக்கென்றே கருதுகிறோம். இதுவும் "தெய்வ சங்கற்பந்தான்" ஓர்வாலிபப் பெண் கால் தேர் சக்கரத்தில் சிக்கிக் கொள்ள அதனை ஒரு யந்திர உதவியினால் விலக்கி காப்பாற்றினர்களாம். யந்திரங்கள் கூடாதென்று மொழிகின்ற காந்தி பக்தர் அங்கொருவரும் இல்லை போலும். இருந்திருந்தால் ஒருக்காலும் யந்திர உதவியை நாடியே இருக்க மாட்டார்கள். எத்தனை நாள் ஆனாலும் கட்டப்பாரைசம்மட்டி கொண்டு ஒரு கை பார்த்திருப்பார்கள். அந்தோ பாவம்!)

இச் சம்பவத்தால் 11 பேர்களுக்கு காயம்பட்டுள்ளது. இவர்கள் முனிசிபல் ஆஸ்பத்திரியில் காப்டன் ராமசாமியிடம் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அருப்புக்கோட்டையில் வரவேற்பு.

சமீபத்தில் ராவ்சாகிப் பட்டமளிக்கப்பெற்ற விருதுநகர் திரு. மு. ச. பெ. செந்திக்குமாரர் அவர்களுக்கும், இராமநாதபுரம் ஜில்லா தேவஸ்தான ஆலோசனைக் கமிட்டித் தலைவரும், விருதுநகர் முனிசிபல் சேர்மனுமான திரு. வே. வ. ராமசாமி அவர்களுக்கும், வைஸ் சேர்மன் திரு. மு. ச. பெ. செ. பெரியசாமி அவர்களுக்கும், அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" ஆசிரியர் திரு. சூ ஆ. முத்து அவர்கள் தனது புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற 'சிவகாமி' மாளிகையில் 3-7-32 ஞாயிற்றுக் கிழமை பகல் 1 மணிக்கு விருந்தொன்று நடத்தினர்.

அவ்வமயம் விருதுநகர், மதுரை முதலிய ஊர்களிலிருந்து பல பிரமுகர்களும், உள்ளூர் பிரபலஸ்தர்களுமாக சுமார் 250 பேர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். முக்கிய விருந்தினர்களுக்கு ரோஜா ஹாரமிடப்பட்டு தனித்தனியாக உபசாரப் பாசுரம் பாடிக்கொடுக்கப்பெற்றது. அவர்கள் பதில் கூறுமுகத்தான் தங்களை வரவேற்றுப் பாராட்டியதற்கு வந்தனங் கூறி, தற்காலத்தில் கல்வியின் முக்கியத்தையும், விட்டுக்கொடுக்கும் சுபாவத்தின் அவசியத்தைக் குறித்தும் விரிவாகப்பேசினார்கள்.

விருதுநகர் தலைவர்களின் விஜயத்தை மேற்கொண்டு இந்நகர் நாடார் மகாஜனங்கள் சார்பாகவும், மற்றொர் வரவேற்பு உபசாரமளிக்கப்பெற்றது. தலைவர்களை வரவேற்றுபசரிக்க பெருங் கூட்டம் கூடியிருந்தது.

திரு. சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியர் தலைவர்களை வரவேற்றுப் பாராட்டி உபசாரங்கூறினர். தலைவர்கள் தங்களை உபசரித்ததற்கு வந்தனக்கூறி ஒற்றுமையின் அத்தியாவசியத்தை மிகவும் வற்புறுத்தி பேசினார்கள்.

தாலூகா போர்டு மெம்பர் திரு. குருவப்ப நாயக்கர் சமீபத்தில் விருதுநகர் தலைவர்களை கௌரவப்படுத்தும் பொருட்டு தனது 'சீதாபதி' மாளிகையில் மாலை 5 மணிக்கு ஓர் சிற்றுண்டி விருந்து நடத்தினர். சுமார் 100 பிரபலஸ்தர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். பின், திரு. கருப்பையா தலைவர்களைப்பாராட்டிப் பேசினர்.

(ஒரு நிருபர்.)

அழகியநல்லூர் ஆதி திராவிட வாலிபர் சங்கம்.

27-6-32ந்தேதி சுயமரியாதைப்பாவலர் திரு. தி. அ. வேங்கிடசாமி அவர்கள் இல்லத்தில் அழகியநல்லூர்

ஆதிதிராவிட வாலிபர் சங்கக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் அறுப்புக் கோட்டைத் தாலூகா தாழ்த்தப்பட்டவர் மூன்ருவது மகா நாடு நடத்துவதென்றும், டை மகா நாட்டிற்கு வரவேற்புக் கழகத்தலைவராக மேலைத்துலுக்கன் குளம் எ. எம். ஸ்கூல்மாஸ்டர் திரு டி. எஸ். ஜேம்ஸ் அவர்களையும், காரியதரிசியாக திரு சின்னசாமி அவர்களையும், திரு.பர்னவாஸ்அவர்களைப்பொக்ஷகிதாராகவும் தேர்ந்தெடுப்பதாகவும். இன்னும் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிருர்.

விதவைமறுமணம்

கத்தோலிக்கர்களின் முன்னேற்றம்.

முசிரிதாலுகா கோட்டபாளையம் கிராமத்தில் 2-7-32 சனிக்கிழமை காலை 7-மணிக்கு டையூர் மிராஸ் எ. ஞசை ரெட்டியாருக்கும் சுமார் 15 வயதுள்ள விதவை என். தெரஸ் மரியம்மாளுக்கும் மெய்விவாகம் நடத்தி வைக்கப்பட்டது. மணமக்கள் இருவரும் உறுதி மொழி கூறி மாலை மாற்றிக் கொண்டனர். கத்தோலிக்கசபையினர்களான இவர்களுக்கு விதவாவிவாக உரிமைஉண்டெனினும் இதுகாறும் இந்துமத வைதீகர்களைப்போன்று டைவிவாகங்களை செய்ய முன்வராமல் வளரவிருந்தது வருந்தத்தக்கது. தற்போது இந்து வைதீகத்திர்கு சாவுமணியடிக்கப்பட்டு இந்துரெட்டிகளேவிதவாவிவாகம் செய்திருப்பதைப்பார்த்து இம்மணமும் நடந்தேறியிருக்கிறதென நம்புகிறேன். இனியாவது நமது சமூககத்தோலிக்க நண்பர்கள் விதவைமணம் நடத்த முன்வருவார்களென •விரும்புகிறேன். வீரமுடன் துணிந்து வந்து மணம்செய்து கொண்டதம்பதிகளைப் பாராட்டுகிறேன்.

(ஒரு நிருபர்)

[9-ம் பக்கம் பார்க்க]

ளிப்பை அடைகின்றது. யார் தான் சூர்ய உதயத்தைக் குறித்து ஆச்சரியப்படமாட்டார்கள்? சூர்ய உதயமும் அஸ்தமும் ஓர் அழகிய காலமாகும். எந்த உயிரும் இந்த சம்பவங்களைக் கண்டு களிப்படையாமலிரு. எல்லா உயிருக்கும் உண்டாகும் குதூகலத்தை, ஆதிவேத மனிதன், இந்த காயத்திரி ஜபமாக உச்சரித்து வந்தான். இவன்உச்சரித்தது போலவே, இன்றைக்கும் சந்டா தீவுகளில் (Sunda islands) வசிக்கும் குரங்குகளும், சூர்யோதயத்தைக் கண்டு கை கொட்டி ஆர்ப்பாட்டம் செய்கின்றன. சந்தியா வந்தனமென்பதே, சந்திகாலத்தில் அதாவது காலை மாலையில், செய்யும் வந்தன மென்று பொருள். இந்த வந்தனத்தையே கோழிகளும், பரவைகளும், குரங்குகளும் சூர்யனைக் கண்டவுடன் தத்தம் கூச்சல்களால் குறிப்பிடுகின்றன. தங்களுக்குள் எழும்ஓர் குதூகலத்தை அதாவது சந்தோஷத்தைக் கூச்சல் மூலமாக தெரியப் படுத்துகின்றன. அது போலவே வேத காலத்து மனிதரும், சந்தி காலங்களில் சூர்யனைக் கண்டதும் ஓர் வித சந்தோஷத்தைக் குறிக்க சந்தியாவந்தன மென்னும் கூச்சலை இட்டு வந்தனர். இந்த கூச்சலையே இன்றைக்கும் இருபிளப்பாளர்களெனும் வேதியர், காலையிலும், மாலையிலும் சூர்யன் பக்கம் திரும்பிச் செய்கின்றனர். சந்தியா வந்தனத்தின் ஆரம்பம் (Origin) இவ்விதமிருக்க, தற்கால வேதியர்கள் இந்த சாதாரண குதூகல குறிப்பை Mysterious words மறைவான சொற்களென்றும், பிராமணர்களுக்குத் தான் இவை உறித்தென்றும், சொல்லித் திரிகின்றார்கள். மலையத் தீவுகளில் (Malay islands) இந்த அந்தணர்கள் போய் பார்ப்பார்களாகில், குரங்குகளும் "சந்தியா வந்தனத்தை" கை கொட்டி குறிப்பிங்கின்றதைக் காணலாம். ஆனல்குரங்களுக்குகபடமென்பதும் கூடா தென்பதும் தனது சொத்தென்பதும், உயர்ந்தவன் தாழ்ந்தவனென்பதும், பார்ப்பான் பரையன் என்பதும் தெரியாதாகையால், அவைகள் சத்தமிடுவதில் ஒன்றும் ரகசியமில்லை. மனிதனே, தான் பேச ஆரம்பித்ததும், மோசம், வஞ்சனை, மேல் கீழ்,உயர்வு தாழ்வு என்று தனக்குள் வேற்றுமைகளை உண்டாக்கிக் கொண்டு, "சந்தியா வந்தனம்" பிராமணன் தான் சொல்ல வேண்டும் மற்ற பாமர மக்கள் சொல்லும் நாவை துண்டிடப் படுமென்று சட்ட திட்டங்களை உண்டாக்கி கொண்டு தனது சீவனத்தை நடத்தி வருகின்ருன். சாதாரண சொற்கள், சீவனஉபாயத்திற்காகவே மறைத்து வைக்கப்பட்டு மந்திரங்களாக பாவிக்கப் படுகின்றன. இது தான் மந்திரங்களின் ஆதாரம். மறைபொருள் கொண்டவை எல்லாம் மந்திரங்களே! மாட்டுச் சாணத்தை சாம்பலான பிறகு "மந்திர மென்பது நீரு, வானவர் தொழுவது நீரு," என்று பாடும் ஊரில், சாதாரண சொற்கள் மந்திரங்களாக ஏன்பாவிக்கப்படா? மந்திரங்களின் உற்பவம் [Origin] இதுவே. சாதாரணகல்லும், செம்பும், களிமண்ணும் விக்கிரக துபஸ்களாக மாறும்போது எப்படி மகத்துவமும் பயபக்தியும் பெறுகின்றனவோ, அவ்விதமே சாதாரண சொற்கள் பேசும் திறமையாலும், தொனியாலும், ரகஸ்யமாக உச்சரிப்பதாலும், மறைவாக வைக்கப் பட்டிருந்ததாலும், பாமர மக்களுக்கு ஓர் வித நம்பிக்கையை உண்டாக்குகின்றன. மந்திரங்களின் ஆதாரத்தையும், எதார்த்தத்தையும் பாகுபாடு Analysis) செய்து பார்க்குமிடத்து "தோலும் கோலுமாக"வேயில் காணப்படும்.

பாம்புகடி மந்திரத்தால் போக்கப்பட்டது என்ருல், மந்திரத்தைக் கொண்டு, ஒரு தூசையாகிலும், திரணத்தையாகிலும், அசையச் செய்யுங்கள், பார்ப்போம்?

பூசை நெய்வேத்தியத்தால்,கோரிக்கை நிறைவேறிய தென்ருல், நேர்வாளத்தை சாப்பிட்டு விட்டு அல்லது அகஸ்திய கொழும்பு எனும் பேதி மாத்திரையை உண்டு ஆகும்பேதியை பூசை நெய்வேதங்களால், நிறுத்துங்கள் போர்ப்போம்?

பாம்பு கடியையாகிலும் அல்லது, விஷ சுரத்தையாகிலும் மந்திரத்தால் போக்க முடியுமாஞல், ஏன் விஷத்தை யுண்டவன் மந்திரத்தால் ஏன் சுகமடையலாகாது? பாம்பால் கடிக்கப்பட்ட கோழி, நாய். எலி, பூனை முதலிய சந்துக்களை, மந்திரத்தால் ஏன் காப்பாற்றக் கூடாது? சுரங்கண்ட நாயையாகிலும் அல்லது குதிரையையாகிலும் மந்திரந்தால் குணப்பட்டதாகக் கேள்விப்பட்டு இருக்கின்றீர்களா? மந்திரத்தால், மிருகாதிகளுக்குவரும் நோய்கள் போயிற்றென்ருல், மிருக வைத்தியர் என்னத்திற்கு வேண்டும்? மிருகாதிகள் படும் நோய்களாவது அல்லது உட்கொண்ட விஷயமாவது, மந்திரத்தால் போகாதெனில் மந்திரங்கள் மனிதனை எப்படி காப்பாற்றும்? என்று நமது நம்பும் நிருபர்களைக் கேட்கின்றேன். "ஓம், ஓங்காளி, பத்திரகாளி" என்று முணமுணவென்று சொல்வதற்கும் 'ஆம், வீரன் முத்தன், கரியன், என்று சொல்வதற்கும் விசேடமென்னை? கீழ்க்கண்ட சொற்களால் பாம்புகடியும் தேள் கடியும் போகாதென்ருல் மேற்சொன்ன சொற்களால் போகும் என்பதை எவ்விதம் நம்புவது? அறவு தீண்டிபநாய் மந்திரத்தால் பிழைக்கா அறவு தீண்டியமனிதன் மந்திரம் எப்படி பிழைக்கவைக்கும்? நமது நண்பர்கள் மந்திரத்தின் பித்தலாட்டத்தைப்பார்க்கவேண்டுமாஞல் மாந்திரீகத்தில் வல்லவர்களை அழைத்து கோழிகளை விஷப்பாம்பைக்கொண்டு கடிக்கவைத்து மந்திரியுங்கள் என்று சொல்லலாம். இதஞல் மந்திரத்தின் பயன் விளங்கும். இத்தியாதி பரீட்சைகளைச்செய்து உண்மை அறிந்து கொள்ளாமல் 'நான் பார்த்தேன்' 'அவன் பார்த்தான்; என்று சொல்லுவதில் அர்த்தமும் இல்லை. பயனுமில்லை. மந்திர தந்திரங்கள் பொழுதை போக்குவதற்கு எற்பட்டவைகளேயொழிய, ஞானம் பெறுவதற்கல்ல என அறியவும். மெஞ்ஞான விசாரணையால் மனிதன் மிருகத்தன்மையிலிருந்து விடுபட்டு நிலத்தை உழவும், பயிர் விளையச்செய்யவும், அம்புவில்லைக்கொண்டு கொடிய மிருகங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் வன்மை அடைந்தான். இன்று காலத்தையும் இடத்தையும் கடந்து Time and Space மனிதன் நிலத்தின் பேரிலும், நீரின் பேரிலும், ஆகாயத்தின் பேரிலும் விரைவாக செல்வது உங்கள் மூடபக்தியாலல்ல, உங்கள் வேத வேதாந்தங்களால் அல்ல; உங்கள் கடவுளாலல்ல' உங்கள் பேய்பிசாசுகளாலல்ல உங்கள்மந்திர தந்திரங்களாலல்ல. விஷய ஞானத்தைப்பெறுவதில் உயிரையும் இழந்து, இரவும் பகலும் உழைத்து விசாரணையே கண்ணாக பாவித்து, கஷ்டப்பட்டு வந்தமையால் மணி ஒன்றுக்கு இரண்டுமூன்று மைல் நகர்ந்ததிலிருந்து 30, 40 மைல் போகத்திறம்பெற்ருேம். எந்த உங்கள் கடவுளால் இந்தப்பயனை நாம் அடைந்துவருகின்ருேம் என்பதை கைவிட்டுக்காட்டுங்கள்?

குறிப்பு,

இன்னெரு ஞாயமும் இந்த சந்தர்ப்பத்தில்கவனிக்கப்பாலது, பாம்புகடியால் கோழியும் சாகின்றது. மனிதனும் சாகின்ருன். பாம்புகடித்த பாகத்தை துண்டித்துவிட்டால் கோழியும் தேரிவிடுகிறது; மனிதனும் தேரிவிடுகின்ருன். அப்படி இருக்க மனிதனுக்கு மாத்திரம் மந்திரம் பலிப்பதாகச் சொல்வானேன். கோழிக்குமாத்திரம் பலிக்காது என்று சொல்வானேன், பாம்பால் கடியுண்டகோழி, பன்றி, எலி, குதிரை முதலிய பிராணிகள் மந்திரத்தால் விஷம் நீங்கியதுஎன்று கேள்விப்பட்டதுண்டா? மனிதன் மயங்குவதால் "மந்திரத்தால் மாங்காய் விழுந்தது" என நம்புகின்ருன். இவனைத்தவிற எந்த சீவனுக்கும் இவ்வித நம்பிக்கைக்கு இடமிரா.

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

தோழர் டி. வி. சுப்பிரமணியத்திற்கு வரவேற்பு.

28—6—32-நாள் செவ்வாய்க்கிழமை மாலை 7-மணிக்கு கோவை சுயமரியாதை வாலிபர் சங்கத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. சங்கத்தலைவர் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமை வகித்தார். ஆண்டு விஜயம் செய்த 'திராவிடன்' ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்களுக்கு மேற்படி சங்கத்தாரால் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அதற்குப்பதிலளிக்கு முகத்தான் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் பேசியதின் சுருக்கமாவது:—நான் இன்று உங்களிடையே வந்து பேசும்படியான ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது பற்றிப்பெரிதும் மகிழ்கின்றேன்.

நீங்கள் எனக்களித்திருக்கும் வரவேற்பு இதழில் நான் ஏதோ ஒருவராலுஞ்செய்யமுடியாத தியாகத்தை பார்ப்பனரல்லா தாரியக்கத்துக்குச் செய்துவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். மனிதனுகப்பிறந்தவன் தனது சமூகத்துக்காற்றவேண்டிய

தொண்டுகளில், கடமைகளில், ஒரு சிறிது என்னால் செய்யக்கூடிய அளவு செய்திருக்கலாம். பார்ப்பனரல்லாத ஒரு மாபெருஞ்சமூகம் இன்று சகல துறைகளிலும் தாழ்ந்தும் 100-க்கு மூவரேயுள்ள ஒரு பார்ப்பனச் சமூகம் எதிரேவருமில்லாது இருமாந்து முன்னேறவும் காரணமாயுள்ளது. அவர்கள் தமது சமூகத்துக்குத் தாங்கள் ஆற்றவேண்டிய கடமையைச்செய்ய உவப்புடன் முன்வருவதால்தான் என்பதை நான் உறுதியாகக்கூறுவேன். ஒவ்வொரு பார்ப்பனனும் தயங்காது தன்னாலான காரியங்களைச்செய்ய சிறிதும் பின்னடைவதில்லை. பார்ப்பனரல்லாதாரியக்கம் தோன்று முன்பே ஒரு சிறு கூட்டத்தாரின் ஏகபோக உரிமையை அவர்கள் மற்றையோரை இழிவுபடுத்த உபயோகித்ததை யொடுக்கவேண்டுமென்ற ஓர் எண்ணம் உதித்தது. அதற்காக உழைக்க முற்பட்டது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆகவே 1617-ல் ஜஸ்டிஸ் இயக்கம் ஆரம்பித்தவுடனே அதில் ஈடுபட்டு உழைக்கவும் அப்பிரசார காலத்தில் நமது தலைவர் தோழர் சிவானந்தம் அவர்களின் கூட்டுறவு பெறவும் ஏதுவாயிற்று.

இனி சுயமரியாதை இயக்கத்தில் நான் ஏதேதோ சாதித்துவிட்டதாகப் புகழுரை கூறியுள்ளீர்கள். அப்புகழுரைக்கு நான் சிறிதும் தகுதியுடையவனன்று. அரசியல் சீர்திருத்தத்தோடு சமூக, மத சீர்திருத்தமும் செய்யவேண்டுமென்னும் நோக்கத்துடனேயே பார்ப்பனரல்லாதாரியக்கத்தைத்தோற்றுவித்த பெரியார்கள் அவ்வியக்கத்தைக் கண்டார்கள். தமது கொள்கைகளைப் பட்டவர்த்தனமாக வெளியிட்டார்கள். அதற்காகவே தங்கள் ஆயுள் முழுதும் உழைத்தார்கள். ஆனால் தற்காலத் தலைவர்கள் அரசியலில் தங்களது சுயநல எண்ணத்தை ஈடேற்றுவதில் கவனஞ்செலுத்தி சமூக மத சீர்திருத்தங்களைப் புறக்கணித்தபின் அதற்கெனப் பெரியார் ஈ. வெ. இராமசாமியார் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கத்தின் உயர் நிலை கண்டு அதை ஆதரிக்க வேண்டியதென்று கடனுணர்ந்து அப்பணி மேற்கொண்டேன்.

பல சமூகங்களும் பல துறைகளிலும் முன்னேறுதல்தானே தேச முன்னேற்றமென்பது. இந்தியாவை நான்கு எல்லைகளையும் விஸ்தீரணத்தைப் பெருக்குவதாகாதே தேச முன்னேற்றமென்பது? ஆகவே தாழ்த்தப்பட்ட சமூகத்தார் தங்கள் முன்னேற்றங்கருதி தங்கள் நன்மதிப்பிற்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரைத்தமக்குள்ளாகவே தேர்ந்தெடுப்பதால் தேசியம் கெட்டுவிடும் என்றால், அத்தகைய ஒரு தேசியம் இருக்கிறதென்றால் அதன் பொருளென்ன? ஒரு சிறுசாராரின் ஏகபோக ஆதிக்கம் என்று தான் நான் பொருள்கூறுவேன். எல்லாப் பத்திரிகைகளும் காந்தியார் வாக்கு என்பதைக் குருட்டுப்பிடியாகப் பிடித்துக்கொண்டு பொதுத்தொகுதிக்கூச்சலிட்டபோது நமது திராவிடன் மட்டும் தனித்தொகுதியை யாதரித்து அதன் நன்மைகளையும், தேசிய வீரர்களின் சூழ்ச்சிகளையும், புரட்டுகளையும் வெளியாக்கி வந்ததோடு சுயமரியாதைத் தோழர்களும் பிரசாரம் செய்ததன் பயனாய் இப்பொழுது தனித்தொகுதி அவர்களுக்களிப்பதென உறுதியாய்விட்டது என்றும் இன்னும்பல மேற்கோள்களுடன் ஒரு அரிய சொற்பொழிவாற்றினார். பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

சுயமரியாதைத் திருமணம்.

திருநெல்வேலி ஜில்லா கூந்தகுளத்தில் 22-6-32ல் திரு. எ. ஆறுமுகம் அவர்களுக்கும், திருமதி மா. முக்கம்மாள் அவர்களுக்கும், திரு. எஸ் சுப்பையா அவர்கள் தலைமையின் கீழ் எஸ். எம். ஜோசப்சுப்பையா அவர்களால் யாதொரு மூடச்சடங்குமின்றி சீர்திருத்தமுறையில் திருமணம் நடத்திவைத்தனர். அவ்வமயம் சிலரால் அர்த்தமற்ற சடங்காச்சாரங்களைப்பற்றியும், சுயமரியாதைத் திருமணத்தின் அவசியத்தைப்பற்றியும் அரியசொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. 'இப்பகுதியில் இதுவே முதலாவது சுயமரியாதைத்திருமணமாகுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

நாகை சுயமரியாதைச் சங்கம்.

29-6-32 மாலை 6 மணிக்கு நிர்வாகக்கூட்டம் ஒன்று சங்கத்தலைவர் தலைமையில் கூடிற்று. அதுபோது நிகழ்ச்சிக்குறிப்பில் கண்டபலவிஷயங்களைப்பற்றி பேசி ஒரு முடிவிற்கு வந்தபின் கூட்டம் 8.மணிக்கு இனிது முடிவுற்றது.

சங்கத்திற்கு வரும் கடிதங்கள் இனிமேல் கீழ்கண்ட விலாசத்திற்கே அனுப்பவேண்டும்.

காரிய தரிசி
"சுயமரியாதைசசங்கம்" புதுரோடு
நாகபட்டணம்.

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

விட்டு முன்னுக்கு வாருங்கள், மற்ற தேசத்து பெண்கள் முன்னேறிப் போய்கொண்டிருக்கும் வேகத்தைப்பாருங்கள். அப்பொழுது தான் அவ்வுணர்ச்சி உங்களுக்கும் தோன்றும்.

சகோதர சகோதரிகளே, நம்நாடு விடுதலையடைய வேண்டுமானால். நாட்டு மதங்கள் அழிய வேண்டும். ஏழைபணக்காரன் வித்தியாசம் தொலையவேண்டும்- கீழ்ஜாதி, மேல் ஜாதி என்பது நசுக்கப்பட வேண்டும். பெண்ணுரிமை பெரிதும் காக்கப்பட வேண்டும், அன்றே நமது விடுதலை, இன்றேல் என்றும் நாம் அடிமையே.

நாகை தேசபக்தசமாஜம்

சமாஜத்தின் காரியதரிசி தோழர் கே. சாமிநாதன் சென்னை செல்வதைமுன்னிட்டு சமாஜ அங்கத்தினர்களால் 28-6-32 ல் தேநீர்விருந்தொன்று மாலை 6-மணிக்கு நடைபெற்றது.

தோழர் வி. சாமிநாதன் தலைமையில் மாலை 7-மணிக்கு சமாஜகட்டிடத்தில் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அது பொது சுயமரியாதை சங்கத்தினரும், பிறபலரும் விஜயம் செய்திருந்தனர். தோழர் கே. சாமிநாதன் சமாஜத்திற்கு ஆற்றிய தொண்டைக்குறித்து தலைவர் புகழ்ந்து கூறியதை பின்பற்றி தோழர்கள் எஸ். முருகேசம், டி. சிவஞானம் டி. என். ராமச்சந்திரன், கே. முருகேசன், என். சிவஞானம் பேசினார்கள்.

காரியதரிசி தோழர் கே. சாமிநாதன் தனக்கு செய்த உபசாரத்திற்கு பெரிதும் நன்றி செலுத்துவதாகக் கூறியதும் இரவு 8-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

மறுநாள் மாலை 6-மணிக்கு ஆனந்தாஜிம் ருஷியம் கிளப்பாரால்மற்றுமோர் தேநீர் விருந்து, சமாஜகாரியதரிசி தோழர் கே. சாமிநாதன் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

30-6-32 மாலை 6-மணிக்கு நாகை ரயில் நிலையத்தில் தோழர் கே. சாமிநாதன் அவர்களுக்கு பூமாலை சூட்டி வந்தனத்துடன் பெரிய ஆரவாரத்துடன் வழியனுப்பினார்கள்.

என ஒரு நிருபர் எழுதுகிறார்

ஆம்பூர் ஆதிதிராவிட அபிவிருத்தி சங்கம்.

கடந்த ஜூலைமாதம் 16-6-32 ல் மாலை 7-மணிக்கு ஆதிதிராவிட சங்கத்தின் நிர்வாகஸ்தர் தேர்தல்கூட்டம் எ. வி. பெரியசாமி அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்கூட்டம் கூடியது. சென்னையிலிருந்து வந்திருந்த ஜி. டி. தங்காரஜி அவர்களால் சங்கத்தின் நிபந்தனைகளை விபறமாய் எடுத்துக்கூறினார். பின்சங்கத்திற்குத் தலைவர் காரியதரிசி முதலியவர்களைத் தேர்ந்தெடுத்த பின் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்.)

"குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

வேலூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வநாதம், வெற்றிலைக்கடை
கல்லுக்கட்டி.

மதுரை.
பி. டி. சங்கரலிங்கம், செட்டி-
யூரணி தெரு.

உடனே தேவை.

நமது பத்திரிகை விற்பனை செய்வதற்குக் கீழ்க்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனே தேவை.

சேலம்.
கோயம்புத்தூர்.
பொள்ளாச்சி.
ஜோலார்பேட்டை.
தஞ்சாவூர்.
வாணியம்பாடி.
விபரங்களுக்கு எழுதவும்.

மேனேஜர்,
குடி அரசு.

குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 1- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

தாது புஷ்டிக்கு
"கெய்ரோடைன்"
சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது.
நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனாமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

[7ம் பக்கத்தொடர்ச்சி]

வனவற்றை யெல்லாம் மனிதனைப் போலவே செய்கின்றன. அவைகளை அவன் அவ்வாறு பழக்காவிட்டால் அவைகளும் அம்மாதிரியான மனிதன் செய்யக்கூடிய காரியங்களை ஒருபோதும் செய்யமாட்டா. மிருகங்களுக்கும் பழக்க வாயிலாகவே பகுத்தறிவு பெறப்படுகின்றன. சாதாரணமாக இயற்கையாக உண்டாகும் ஒரு மனித குழந்தையை நாம் நம்முடன் கலந்து வாழவிடாமல், தன்னந்தனியாக மனித முகங்காணாத ஓரிடத்தில் வைத்திருந்தால் அக்குழந்தையும் தன் பருவத்தில் மற்றைய மனிதனைப்போல் அறிவுத்தன்மை பெறாமல் காட்டு மிருகங்களைப்போலவே தான் வாழ நேரிடும். இவைகளை நோக்குமிடத்து, அறிவு என்பது கடவுளால் நமக்குக்கொடுத்ததில்லை யென்றும், அவ்வறிவு அவனவன் பழக்க வழக்கத்தை யொட்டியே பெறப்படுகின்றன வென்பதும் நன்கு காணக்கிடக்கின்றன. அப்படியிருக்க அறிவை நமக்குக் கடவுள் கொடுத்திருக்கிறார் என்பது எவ்வளவு மோசமான நியாயமென்பது நன்கு விளங்கும்.

இவ்வாறு கூர்ந்து நோக்குங்கால் நாம் பெற்றிருக்கும் அறிவு நம்மைப் பழக்குவோரையும், நாம் பழகுவனவற்றையுமே பொறுத்திருக்கின்றன. இம்முறைபற்றி ஆராய்வோமேல் நாம் உலக சுகத்தையனுபவிக்கத் தக்க அறிவு பெறுதிருப்பதற்கு நமது தாய் தந்தைமார்களும், அவர்களுக்கு அவர்கள் தாய் தந்தைமார்களும், இப்படியே முடிவில் நம்மை ஆதியிற் படைத்ததாகச் சொல்லும் கடவுளையுந் தானே பொறுத்திருக்கின்றன. இவ்வாறிருக்க கடவுள் நமக்குப் போதிய அறிவைக்கொடுத்திருக்கிறார் என்பது எவ்வளவு சூன்யமான நம்பிக்கை பாருங்கள். ஆதியில் கடவுள் படைத்த துண்மையாயின் அவ்வறிவுக் கடவுள் நம்மைத் தக்கபடி பழக்குவித்து எவ்வாறு சர்க்கஸ்காரன் தன் மிருகங்களை ஜனங்கள் சந்தோஷப்படுவதற்கு வேண்டியவரையில் பழக்கி வைத்திருக்கிறானோ அவ்வாறு நாமும் உலகத்தில் துன்பத்திற் சிக்கா வண்ணம் இன்பத்தையடையும்படி போதிய அறிவில் நம்மைப் பழக்குவித்திருப்பாரல்லவா! அவ்வாறில்லாது ஒருவனை ஒரு மாதிரியும் இன்னொருவனைப் இன்னொரு மாதிரியும் ஏற்றத்தாழ்வில் வைத்திருக்தால் அது அக்கடவுளின் பாரபக்ஷத்தனத்தை நன்கு விளக்கவில்லையா!

நண்பர்களே! மேற்கூறிய ஆதாரங்களைக்கொண்டு, உலகில் ஒருகடவுள் சக்திஇல்லையென்றும், நமக்கு அச்சக்தியால் எள்ளத்தனை உதவியுமில்லையென்றும், அவ்வாறு நம்மையெல்லாம் படைத்த கடவுள் ஒருவரிருந்தால், நம் இம்மாதிரியான ஏற்றத்தாழ்வான வழியில் வாழவேண்டியதில்லை யென்பதும், நன்கு விளங்கவில்லையா! இவ்வாறு அர்த்தமில்லாத வீண்சொல்லுக்கு நம்பிக்கைவைத்து, வீணாக நமது அறிவை விசாலப்படுத்திக் கொள்ளாமல், நமக்கு இதுதான் கடவுள் விதித்த விதியென்று காலத்தைக் கடத்தி வாணாளை வீணாக்கிக்கொள்ளாமல், கடவுள் செயலென்பது ஒருவெற்றுரையென்றும், அவர்தான் நம்மைக் காப்பாற்றுகிறவரென்பது சோம்பேறி நியாயமென்றும், எல்லாம் நமது செயல் எதையும், நாம்செய்யலாம் என்னும் உறுதியோடு. தன்னம்பிக்கையோடு அறிவுமார்க்கத்தில் நமது வாழ்க்கையை நடத்திவருவோமாயின், அக்காலத்தில் நம்மைவிழுங்கிக்கொண்டிருக்கும், பஞ்சநோய்பசிப்பிணியென்பது தலைகாட்டாதொழிந்து. நமது நாட்டிலும் மேல்நாட்டைப்போல் கைத்தொழில் விருத்தியும் கலாஞானமும், பெருகி உலகமுன்னணிக்கு வரஏதுவாயிருக்கும். இதனால்தான் நமது சுயமரியாதைஇயக்கம், மனிதனுக்கு கடவுள் நம்பிக்கை தேவையில்லை யென்றும். [illegible] கையால் [illegible] யென்றும், மக்[illegible]

டாக்டர் சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் உண்மையான மருந்துகள்

ஆச்சரியமாய் அநேக நோய்களைக் குணம் செய்கிறது.

மஹா சந்தனாதித் தைலம்.

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது.

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

கண் எரிச்சல்
கண் சிவப்பு
கண்ணில் நீர்வடிதல்
கண் பார்வைக்குறைவு
கண் கூச்சம்
கண்ணில் பீளை சாருதல்
மேகநீர், வெள்ளெழுத்து
ஒருத்தலை நோய்
கைகால் எரிச்சல்
மூலச்சூடு
அஸ்தி காங்கை
வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல்
காது நோய், காது மந்தம்

மண்டை இடி
பீனிசம்
தலை மயக்கம்
தலைப்பொடுகு
சொரி சிரங்கு
தலைமயிர் உதிர்தல்
நாள்பட்ட தலை நோய்

முதலிய பல வியாதிகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை.

24-அவுன்ஸ் டின் ரூ. 4-0-0.
12 ,, ,, ரூ. 2-2 0.

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

[illegible]திருந்த பலத்தையும், வீரிய விருத்[illegible]

இந்த லேகியத்தால் குணமாகு[illegible] நா[illegible]

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும் திடசரீரத்தை உண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் [illegible] சுறுப்பை[illegible] [illegible]வு [illegible] டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை.

1-சேர் டப்பி ரூ. 2-8-0.

ஒரு முறை இத்தைலத்தையும், லேகியத்தையும் உபயோகித்தவர்கள் அதன் அருமையான குணத்தைக்கண்டு, அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரீக்ஷித்துப் பார்க்கவும். பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்.

II.

நமது இயக்க வளர்ச்சிகருதி அமைக்கப்போகும் பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகத்தின் சட்டதிட்டங்களை நம் அருமைக்குடிஅரசிற் கண்டு நாம்எதிர்பாராத விதமாக இலங்கை, கோலாலம்பூர், சைகோன் முதலிய இடங்களிலிருந்தும் இன்னும் இந்தியாவின் நாலுபக்கங்களிலிருந்தும் பல அன்பர்கள் நம் நன்னோக்கத்திற்காக மகிழ்ந்து உற்சாக மூட்டி கடுதாசிகளெழுதியிருப்பதோடு ஏராளமான பங்குகள் சேர்த்துக்கொடுப்பதாயும் பங்குதார்களின் விண்ணப்ப மனுக்கள் அனுப்பித்தரும்படியும் கடுதாசிகள் எழுதியிருக்கின்றனர். அத்தோழர்களனைவருக்கும் எமதுமனமார்ந்த நன்றியுரித்தாகுக. நமது கழகத்தைரிஜிஸ்டர் செய்ய சகலவிதமான முயற்சியும் செய்யப்பட்டு வருகிறது. ரிஜிஸ்டர் செய்த பின்னரே பங்குகள் சேர்க்க முயற்சிசெய்யப்படுவதோடு பங்குதார்களின் விண்ணப்பமனுக்கள் நம்தோழர்களுக்கு அனுப்புவிக்கபடும். அதுவரை நம் அன்பர்கள் சிறிது பொறுத்துக்கொள்ளும்படி அன்புடன்கேட்டுக்கொள்கிறேன்.

நமது இயக்கத்தை அகில இந்திய இயக்கமாக்க வேண்டும் என்பது மட்டுமல்ல அகில உலக இயக்கமாக்க வேண்டுமென்று நாம் கனவுகண்டு கொண்டிருக்கின்றோம். இத்தகைய பெரும் தொண்டை மேற்போட்டுக் கொண்டிருக்கும் நாம் அதற்காகச் செய்யும் ஆரம்பத்தொண்டை நினைக்கநினைக்க வெட்கமாக இருக்கிறது. இன்று நம் இயக்கத்தைப்பிரசாரம் செய்ய தமிழ்பாஷையில் குடிஅரசு, தமிழன் எனும் இரண்டுவாரப்பத்திரிகைகளைத்தவிர வேறுபத்திரிகைகளை காணோம். தினசரிப்பத்திரிகையை நடத்தவே நம்மிடத்தில் சக்தியில்லை. ஆங்கில வாரப்பத்திரிகை யாகும் "ரிவோல்ட்டை" ஓராண்டு நடத்திவிட்டு பின்னர் நிறுத்திவிட்டோம். அதன்பின்னர் ஆங்கில வாரவெளியீடோ மாதவெளியீடோ வெளியிடப் போதியமுயற்சி புரியவில்லையென்றால் ஆங்கிலத்தினசரியைப்பற்றி கேட்கவும வேண்டுமோ. இந்நிலையில் தெலுங்கு, ஹிந்தி, மலையாளம் முதலியபாஷைகளில்நம்மியக்கப்பத்திரிகைகள் வெளிப்போந்து அப்பாஷையைப் பேசும்மக்களுக்கு நம்மியக்கத்தைப்பற்றிக் கூறுவதெக்காலம். இத்தகையபத்திரிகைகள் வெளிவராமல் நமதியக்கம் வளர்வதெப்படி? எத்துணைநாளைக்கு நமதியக்கத்தை தமிழ்நாட்டிலே விலங்கிட்டு வைத்திருப்பது. வெறும் மகாநாடுகளைக்கூட்டி சிலதீர்மானங்களைச்செய்து விட்டு கலைந்துவிடுவதால் நம்இயக்கம் முன்னேற்றமடைந்து விடுமா? இவைகளையெல்லாம் ஆராயாது நமதியக்கப் பிரமுகர்கள் கவனியாது எத்துணை நாளைக்கு வாளாவிருக்கப்போகின்றனர். இவைகளைச் செய்ய நாளும் நட்சத்திரமும் பார்க்க வேண்டுமா? அல்லது ஐரோப்பாவில் பிரயாணஞ் செய்யும் நம்தோழர்கள் வரும்வரைகாத்திருக்க வேண்டுமா? நம்மியக்கம் தோழர் ஈ. வெ. ரா அவர்களின் சொத்தென்றும், இத்தகையகாரியங்களை அவர்களே செய்யவேண்டுமென்றும் சிலர்கூறுகின்றனர். இஃது எத்துணை அறியாமையாகும்? நம்மியக்கத்தில் தோழர் ஈ. வெ. ரா அவர்களுக்கு இருக்கும் உரிமைஒருசிறிய தொண்டருக்கும் உண்டு, எனவே எல்லாம் ஈ. வெ. ரா செய்யபடும் என்று பொய்வேதாந்தம் பேசிகாலத்தை வீணாக்காது உடனே ஆவன செய்யமுயலவேண்டும். நம்மியக்கம் தோன்றி இத்துணை காலமாகியும் அதற்கு ஒருதலைமை நிலையம், ஒரு பகுத்தறிவுக்கலாசாலை, பயிற்சி கல்லூரி, முதலிய நம்மியக்கத்திற்கு அஸ்திபாரமான சில வேலைகளைச் செய்ய நினைக்கவோ அன்றி முயற்சி செய்யவோ இல்லையென்றால் நம்இயக்கமிருக்கும் ஏழ்மைநிலையை என்னென்றியம்புவது. இந்நிலையிலிருந்து கொண்டு "மணலைக்கயிறாகத்திரிப்போம், வானத்தை வில்லாகவளைப்போம்" என்று வீண்ஜம்பம் பேசுவதில் என்னபயன்? இவைகளையெல்லாம் நம்தொண்டர்கள் ஆராயாது மாகாண, ஜில்லா, தாலுகா மகாநாடு கூட்டுவதிலே எண்ணமும் சிந்தையுமாய் இருந்து நாம்செய்த தொண்டிற்கு தக்கபலனையடையாமற்போவதை நினைத்து உடனே நம்மியக்கத் தலைவர்களின் மஹாநாடொன்றைக் கூட்டி அதில் ஆராய்ந்து நம்பகுத்தறிவுக் கழகவாயிலாக இவ்வேலைகளையெல்லாம் செய்யமுயற்சிப்பது உசிதமென்று கருதுகின்றேன். எனவே இதுவிஷயமாய் நம்இயக்கத்தோழர்களும், எல்லா அன்பர்களும், ஆலோசித்து நம் குடிஅரசுவாயிலாக தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அன்றிஇவைசம்மந்தமாய் எமக்கு அறிவித்தால் இத்தகைய கூட்டத்தை எமதூரிலே கூட்டவும் தயாராக இருக்கின்றேன். எனவே இதுவிஷயமாய்எப்பொழுதும் போ விருந்து விடாது நம்தொண்டர்கள் மிகுந்த உற்சாகத்தோடு முன்வாருவார்கள் எனஎதிர்பார்க்கின்றேன்.

இம்முடிவு தெரிந்தே நம்கழகசம்மந்தமான இதரவேலைகள் செய்யப்படும் என்பதை நம்மன்பர்கள்அனைவருக்கும் அறிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
தங்களன்பைவிரும்பும்
தோழர். அ. இராகவன்.
சாத்தன்குளம்
1—7—32

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

ஊர்வசியையும், பராசர் மச்சகந்தியையும், வியாசர் வேலைக்காரியையும், பாண்டவர் துரோபதியையும், களவொழுக்க மாடியதாகவும், தேவர்கள் குடியர்களென்றும், வாமனர் பலியை மோசஞ்செய்தனரெனரென்றும், பல தேவர் மதுபானஞ் செய்தாரென்றும், இராமர் வாலியை வஞ்சனை செய்தாரென்றும் விளக்கமாகக் கூறுகின்றனவே? இந்நூல்களையும், இதற்குரிய மதங்களையும் நீக்கி பகுத்தறிவை மேற்கொண்டு நடக்கவேண்டுமென்று சுயமரியாதையியக்கம் கூறுவதில் என்ன தப்பிருக்கிறதென்று கேட்கிறேன்?

இன்னோரன்ன அஞ்ஞானமே சூழ்ந்த வேதாதி புராணங்களின் உற்பவமோ பெரிதும் அந்தகாரத்திற்கிடமாகவே யிருக்கின்றது. "நான்கு வேதத்தைக் கடவுள் பிரமாவுக்குப் போதித்து, பிரமா முனிவர்களுக்கு போதித்ததாக நான்கு வேத பாயிரத்தில் கூறுகிறது. பிர்மா அனாதியான வேதத்தை அக்கினி, வாயு, சூரியன் இம்மூவர்களிடத்தினின்று வெளிப்படுத்தியதாக மநு தர்ம சாஸ்திர முதலத்தியாயம் கூறுகிறது.

மற்றோரிடத்தில், நாய், நரி, கழுதை பசு, தவளை முதலிய ஜந்துக்கள் வயிற்றில் மனிதர் பிறந்து வேதங்களை யெழுதியதாகக் கூறியிருக்கின்றது! வேதங்களை சில ரிஷிகளும் சில அரசர்களும் எழுதியதாகஇருக்கு வேதம், 2, 3, 4 வது வாக்கியங்களில் கூறப்பட்டிருக்கிறது. வீரங்கர் என்னும் அரசனுடைய ஐந்துபிள்ளைகளும் வேதத்தின் சிறந்த கர்த்தாக்களாயிருந்ததாக யசுர் வேதம் 72வது வசனம் கூறுகிறது. நான்கு வேதம் எழுதியவர்களில் யாரும் நரமனிர்த இல்லை யென்று அதே யசுர் வேதம் 112வது வசனத்தில் கூறியிருக்கின்றது.

இவ்விதம் ஒன்றுக் கொன்று முரண் பட்டு இடர்ப்படும் கூற்றுக்கள் யாவும் பொய்யென்றும் பிராமணீயத்தைப் பெருக்குவதற்காகவே அவ்வேதங்கள் எழுதப் பட்டனவென்றும் சுயமரியாதை யியக்கத்தார் பகுத்தறிந்து கூறினால் அதில் என்ன தூஷணை யிருக்கிறதென்று கேட்கிறேன்?

இங்ஙனமே பரந்தஇராமாயணமுதலிய இதிகாசங்களும் பார்ப்பனரல்லாதாரை யடிமைப்படுத்தும் ஒரு சூழ்ச்சி நூற்களே தவிர அந்நூல்களினின்று மனித சமூகம் அடையத் தக்க நன்மை ஒரு அணுவளவேனுமுண்டா? அந்நூற்களில்புத்த வியாரங்களைப்பற்றியும், புத்த குருக்களைப் பற்றியும் ஆங்காங்கு கூறியிருக்கின்றமையால் அந்நூற்கள் 1500 வருடங்கட்குட்பட்டவையே தவிர வேறல்ல. அந்நூற்களில் காணப்படும் பிராமணீயத்தின் ஆட்சி வேறென்னூல்களிலு மில்லை யென்றே கூறலாம்.

ஐயாயிர வருடங்களுக்கு முன்னர் கலியுக ஆரம்பத்தில் ஜீவித்திருந்த வியாசரால், எழுதப்பட்டு, புனித நூலாகக் கொண்டாடப்பட்டு வரும் பதினெண் புராணங்களைக் கவனிப்போமானால் அவைகள் பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்ட விலங்குகளென்றே துணியலாம். அன்றியும் 2500 வருடங்களுக்கு முன் பிறந்த புத்தரைப் பற்றி சிவ புராணம், பார்வர்த்தம் காண்டத்திலும் 700 வருடங்களுக்கு முன்னிருந்தவராகும் இராமானுஜாசாரியரைப் பற்றி இலிங்க புராணத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்றால், 5000 வருடங்களுக்கு முன்னிருந்த வியாசர் அப்புராணங்களை எழுதினரென்பதை எவ்வித பொய்யிற்கு ஒப்பிடலாமென்று கேட்கிறேன்? தவிர முகமதிய அரசராகிய ஜிகாங்கீர் காலத்தில் அமெரிக்கா தேசத்து ஒரு கிறிஸ்துவ பாதிரியினால், புகையிலையையும், உருளைக் கிழங்கையும் கொண்டு வந்ததாக (Tajuk) டாஜக் என்னும் புத்தகத்தில் எழுதியிருக்கின்றார். சரித்திரக்காரரும் இதனை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே புகையிலை இந்தியாவுக்கு வந்தது 350 வருடங்கட்குட்பட்டதென்பது தேற்றமாம். ஆனால் புகையிலையைப்பற்றி பிர்மாண்டபுராணத்தில் "பிராப்தேக லியுகே" என்னும் சுலோகத்திலும் பத்மபுராணம் "தூம்பிரபானரதம்" என்னும் சுலோகத்திலும் கூறியிருப்பதாவது, "யாரொருவன் இக்கலியுக அஞ்ஞான காயத்தில் புகையிலையையுபயோகிக்கின்றானோ அவன் நரகத்திற்குப் போவான். தருமவான் சுருட்டுப்பிடிக்கும் பிராமணனுக்கு தருமஞ் செய்தால் அவன் நரகத்திற்குப் போவான். மேலும் அப்பிராமணன் கிராமத்தில் பன்றியாய் பிறப்பான் என்று கூறப்பட்டிருக்கிறது. இப்போது புகையிலையையுபயோகித்துவரும்நூற்றுக்கு90 கணக்கானபிராமணர்கள் கிராமத்தில் பன்றிகளாய்ப் பிறக்கப் போவதைப் பற்றியும், அல்லது இப்போது கிராமத்தில் பன்றிகளாய்ப் பிறந்திருக்கும் புகையிலையை உபயோகித்த பிராமணரைப் பற்றியும் நாம் பரிதாபப்பட வேண்டியதாயிருந்தாலும், 400 வருடங்களுக்குட் பட்ட புகையிலை 5000 வருடங்கட்கு முன் எழுதிய புராணத்தில் எங்ஙனம் புகுந்ததென்பதற்கு எந்த வைதீகராவது விடை யிறுக்க முன்

வரக்கூடுமா என்று கேட்கிறேன்?

மேலும் ஐயாயிரம் வருடத்திற்கு
முன்பிருந்த அந்த வியாசர் கூறிய
பாகவதம் கூறுவதாவது, நாரதர் தன்
மனதில் சஞ்சலமடைந்து பத்திரிகா
ரண்யஞ் சென்று தவம் புரிந்து விஷ்
ணுவை தரிசித்தாராம் அப்போது
விஷ்ணுவானவர் நாரதரைப் பார்த்து
உலகம் எப்படி யிருக்கிறதென்று
கேட்க நாரதர் விடையளித்ததா
வது:—முசல்மான்கள் ஈஸ்வரால
யத்தை யிடித்து நாசமாக்கி விட்டார்
கள், ஆகவே ஞானவாபிஎன்றழைக்
கும் கிணற்றில் ஈஸ்வரன் விழுந்து
மூழ்கிவிட்டார் என்றனராம் பிறகு
நாரதரும் விஷ்ணுவும் அதற்காக
துக்கங்கொண்டாடினர்களோ இல்
லையோ நமக்கு அதைப்பற்றிக் கவலை
யில்லை. ஆனால் நமது நெற்றிக்கண்
வீரராகிய ஈஸ்வரன் குளத்தில் வீழ்
ந்துமாண்டுபோனது 200 வருடங்
களுக்குமுன் அரசாண்ட ஔரங்க
சீப் காலமாகு மென்பதைப்பள்ளி
ப்பிள்ளைகளும் ஒப்பக் கூடியதா
யிருக்க, 5000 வருடங்களுக்கு முன்
பிருந்த வியாசர் எழுதிய புராணத்
தில் காணப்படுவதற்கு எந்தவைதீகர்
பதிலிறுக்கக்கூடுமென்றும் கேட்கின்
றேன்? முஸ்லீம் அரசர்களைத்தம்
வசப்படுவதற்காக அல்லா உபநிஷத்
தை புகுத்தி விட்ட நம்வைதீகவீரர்
கள் இனி ஆங்கிலேய உபநிஷத்தை
யும், சுயமரியாதை உபநிஷத்தையும்
புகுத்த முன்வரக்கூடுமா?
மக்களின் வாழ்க்கைக்குரிய எல்லாத்
துறைகளிலும் பிராமணீயத்தைப்
புகுத்தி பெரும்பாலான மக்களை
யடிமைகொண்ட பார்ப்பனர் அவர்
களின் சுயநலத்தைப்பாதுகாத்து
க்கொள்வதற்காக தெய்வம், மோ
க்ஷம், நரகம் என்பவைகளின் பேரால்
செய்துள்ள சூழ்ச்சிகள் அளவிடுதற்
கரியனவாம். பிறந்தது முதல் இற
க்கும்வரையும், இறந்த பிறகும்புரோ
கிதத்தில் நம்மனோர் சிக்குண்டுழல்
வதற்கு என்னென்ன தந்திரங்களை
மேற்கொள்ளவேண்டுமோ அவை
களையெல்லாம் செய்துமுடித்துள்
ளதுதான் இந்துவேதமேதவிர நமது
அறிவு, உயிர், உடல், இம்மூன்றுக்
கும் எவ்வித உரிமையும் கொடுக்கக்
கூடிய நிலைமையில் இந்துமதமில்லை
யென்பது மிகையன்றாம்.

இந்துமத தேவர்கள் உலகத்தில்
மனித அவதாரமாகப் பிறந்தால் குள்
ளப்பார்ப்பானாக பிறப்பாராம்அல்லது
நெட்டையான கிழப்பார்ப்பானாக
பிறப்பாராம். வாமனாவதாரமும் சுந்த
ரமூர்த்தியை யாட்கொள்வதற்காக
கிழப்பார்ப்பனராக பிறந்ததும் இதற்
குச்சான்றாம். ஏன் அந்த தேவர்
குள்ளகவுண்டனாகவும், நெட்டை நா
டாராகவும் பிறக்கக்கூடாதென்று
யோசித்துப்பாருங்கள்! இன்னும்
இவை போன்ற நூற்றுக்கணக்கான
உதாரணங்களை யெடுத்தாண்டு பிரா
மணீயத்தின் வஞ்சனையை நிலைநாட்
டலாம். இன்னோரன்ன சூழ்ச்சித்தி
றத்தினின்று மக்களை விடுவித்து
பகுத்தறிவோடுங்கூடிய உலகியலை
விளக்கி சுதந்தர வீரர்களாகவும், சம
தர்ம நேயர்களாகவும் திகழும்படிச்
செய்யவே, தன்மதிப்பியக்கம் பல
வித யெதிர்ப்புகளையும் பொருட்படுத்
தாமல் பாடுபட்டு வருகின்றபடியால்
தேசத்தின் பொதுநலத்தை நாடும்
ஒவ்வொரு இந்தியமக்களும் இவ்விய
க்கத்திற்கு ஆதரவு தருவது ஒவ்வொ
ருதமிழ் மக்களின் கடமையாகும்
எனவலியுறுத்துகிறேன்.

(5ம் பக்கத்தொடர்ச்சி)

நிற்கின்றது. பகுத்தறிவில் நிலை
நிற்கும் வாலிப உலகமும், வறட்டு
வம்பில் ஜம்பமாயிலங்கும் வயோதிக
உலகமும் என்னகாரணம் போட்டா
லும் இனி ஒன்று சேரமுடியாது.
இளைஞர்தம் எழுச்சி, பெண்கள் தம்
சுதந்தர உணர்ச்சி கடலலைப்போல்
யாண்டும்பெருகி வருவதைப்பாவம்!
வைதீகக்குடுக்கைகள் அறியார்போ
லும்! என் செய்வது? காலச்சக்கரத்
தின் வேகமன்றோ பெரிதாயிருக்கின்
றது! பார்ப்பன மகாநாட்டார் கண்
மூடித்தனமாய் இளைஞர்களையும்
இழுத்துக்கொண்டதானது அவர்கள்
குறுகிய புத்தியைக்காட்டுவதோடு
வியப்பாகவே யிருக்கின்றது. வைதீ
கத்தை வேரோடு சாய்த்து வெந்நீர்
ஊற்ற வாலிபர்கள் தயாராயிருக்கை
யில், ஊற்றியும் வருகையில், பார்ப்ப
னீயக்கொள்கையை வாலிபர்களி
டையே பரப்பவேண்டுமென்னும்
இவர்கள் தீர்மானம் வேடிக்கையே
விளைவிக்கின்றதன்றோ? "ஏமாந்த
வன் தொடையில் கயறுதிரிப்ப"
தென்பதை இனி இளைஞர்களிடத்
திலா காட்டமுடியும்? என்னே!
வைதீகர் மனக்கோட்டை! வைதீக
வெறியர்களே! இனி இளைஞர்களை
யும், பெண்களையும் ஏமாற்றி உங்கள்
வஞ்சகக்கொள்கைகளை நாட்டிடைப்
பரப்பிவிடுமோமென நம்பி ஏமாந்து
போகாதீர்கள், எச்சரிக்கை! எச்சரி
க்கை!! நீங்கள் கட்டும் ஆகாயக்
கோட்டை உங்கள் ஒட்டுத்திண்ணை
யோடு சரி. விட்டொழியுங்கள். சுய
மரியாதைச்சூரியன் நாளொரு மேனி
யும், பொழுதொருவண்ணமுமாய்
வளர்ந்து வருகின்றான். அவன்
முன் உங்கள் மத சாத்திர புராணக்
குப்பைகள் எரிந்து சாம்பராவதைத்
தவிர வேறுவழியில்லை. ஏன் இவ்
வீண் ஆர்ப்பாட்டம்?

[4ம் பக்கத்தொடர்ச்சி]

வது. நமது திராவிட மக்கள் உட
லையும் உயிரையும் மிகக் கஷ்டத்
துடன் பாதுகாக்கும்முதல் நிலைமை
யிலிருக்கின்றனர், சரிவர உண்ண
வும் உடுக்கவும் கொடுத்து வைக்காத
நிலைமையில், தினந்தோறும் நெற்றி
வியர்வை நிலத்தில் விழப்பாடுபட்டுத்
தேடுவதை பார்ப்பன மதத்தின் ஆசா
ரத்திற்கே அர்ப்பணம் செய்வதால்
நம் வாழ்வு வறுமையால் பீடிக்கப்படு
கிறது. அடிமைகளாகவிருக்கவும்,
ஒருவரோடொருவர் ஒன்றுபட்டு
வாழாமலிருக்கவும், செல்வத்தைக்
கைவிட்டு கஷ்டப்படவும்,பார்ப்பனர்
கள் மதம் போதித்து மக்களின்
ஆசையையும், உணர்ச்சியையும் மங்
கும்படி செய்துவிட்டது. ஆராயா
மல் செய்கையில் ஈடுபடுவதும், முன்
பின் யோசனையின்றி மாமூல் பிரகா
ரம் நடப்பதும், ஆயுள்பூராவும் கா
ரண காரியம் இன்னதென்று அறி
ந்துகொள்ளாமல் சென்ற வழியே
சென்றுகொண்டிருப்பதும், மக்களு
க்கு பார்ப்பன மதத்தால் போதிக்கப்
பட்ட பாடங்கள். நமது நாட்டின் மக்
கள் வாழ்க்கையிலும் மதாசாரங்களி
லும் இரண்டுவிதமான வகுப்பார்கள்
தான் தென்படுகின்றார்கள். வழி
காட்டும் பார்ப்பனர்கள் வழிகாட்டப்
படும் திராவிட மக்களாகிய பார்ப்பன
ரல்லாதார் வழி காட்டுபவர் என்றும்
புத்தியையும், அதிகாரத்தையும் ஆட்
கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்
களோ இரண்டுமின்றித்தவிக்கின்ற
னர். இந்த இரண்டு வகுப்பார்க்
குள்ள வித்தியாசத்தை அறவே ஒழி
க்கவேண்டுமென்பது தற்காலத்தின்
அவசியமான செய்கையாகும். மனி
தன் வாழ்விலும் எண்ணத்திலும்
தத்துவ சாஸ்திரம் பலவித மாறுதல்
களை உண்டாக்கிவிட்டது. இது
காறும் ஊழ்வினைப்பயன், தெய்வீகம்
என்ற காரணங்களை ஆதாரமாகக்
கொண்ட எண்ணம் மாறி எல்லா
வற்றிற்கும் மனிதன் தான் காரண
மென்ற உணர்ச்சி எழுந்து விட்டது
மானிடத்தத்துவத்தின் பேரில்தான்
தற்கால நாகரிகம் அமைப்பெற்றி
ருக்கிறது. நமது நாகரீகமோ பார்ப்
பன மத ஆசாரமாகிய பொய் மாய்கை
விதிகளின்மேல் எழும்பி இருக்கிறது

மனவுறுதி வேண்டும், வாக்கினி
லே இனிமை வேண்டும். நினைவு
நல்லதுவேண்டும், நெருங்கின பொ
ருள் கைப்படவேண்டும், கனவு மெ
ய்ப்படவேண்டும், கைவசமாவது
விரைவில்வேண்டும், தனமும் இன்ப
மும் வேண்டும் தரணியிலே பெருமை
வேண்டும், கண்திறந்திடவேண்டும்,
காரியத்திலுறுதிவேண்டும், பெண்
விடுதலைவேண்டும், பொதுவாக வை
ராக்கியமும் தூய்மையான நிலையும்
வேண்டும். மேலும் வியாதியுடைய
வனை சிகிச்சை செயயுங்கால் கொடிய
நோயை முதலில் அழிக்கவேண்டும்.
அவசியமானால் சில அங்கங்களை
துண்டுபடுத்தவோ அல்லது கூறி
டவோ நேரிட்டாலும் நேரும்.
தடவிக் கொடுத்தலும் ஆசைவார்த்
தை புகலுவதிலும் பலனில்லை, வரு
மையினின்று காக்கமுன்வரின், தாம
தமின்றி கை கொடுக்கவேண்டும்.
அரசியல் துறையில் சுதந்தரம் பெற
அவசியமாயிருக்கும் கஷ்டங்களைக்
காட்டிலும் மதம் சம்பந்தமாயும்
வாழ்வின் சம்பந்தமாயும் சுதந்தரம்
பெற அதிகம் கஷ்டங்கள் அனுப
விக்க நேரிடுமென்பதில் ஐயமில்லை.

பார்ப்பன மதத்தால் நம் திராவிட
மக்களின் வாழ்வு சிதையுண்டு கிடப்
பதை சிகிச்சை செய்யவும், இனி
மேல் அவ்விஷத்தினால்தீண்டப்படா
மல் நல்வாழ்வெய்தவும், சுயமரியா
தையைத் தழுவித் தழைத்தோங்கும்
படி செய்வதைத்தவிர வேறு மார்க்க
மில்லை. இவ்வியக்கம் அன்பையும்,
அறிவையும் ஆராய்ச்சியையும் உண்
மையையும் உருவாகத்திரட்டி உல
கத்தோர் இடுக்கண் களைய வந்தித்
தது. பிறர்க்கு தொண்டு செய்வதை
யும் மறியாதையைக் காப்பாற்றுவதை
யும் சிரமேற்கொண்டு இவ்வியக்கம்
பிறர் செய்யும் அட்டூழியங்களையும்
அவமரியாதையான செயல்களையும்
கண்டனம் செய்கிறது. ஆகையால்
கடவுள், மதம் என்று நாமமிட்டு
பார்ப்பனப்புரோகிதர்கள் அடாத
புறட்டுகள் செய்து பாமர மக்களை
ஏமாற்றி பணம் பறிக்கும் அக்கிரமங்
களை கண்டனம் செய்யவும், ஜாதிமத
வேற்றுமையை உண்டு செய்து மக்
களைக்கூடி வாழவிடாது பிரித்து
வைக்கும் பார்ப்பன மதக்கொடு
மையை வேறறுக்கவும், உண்மை
யான சுயமரியாதை வாழ்வை மக்
களுக் கூட்டவும் இவ்வியக்கம்
கங்கணம் கட்டி நிற்கிறது. தாழ்ந்த
வகுப்பினர்களையும், பெண் மக்களை
யும் பூரண சுதந்தரமடைய வழியை
சுத்தம் செய்வதிலும் இவ்வியக்கம்
பரஸ்பர ஊக்கமுடையது. எவை
எவை மனிதனுடைய சுயேச்சைக்
கும் இன்பத்திற்கும் தடையாகவிரு
க்கின்றனவோ அவைகளையெல்லாம்
வேரோடுகளைந்து மனிதர்களையெல்
லாம் மனிதர்களாக வாழச்செய்வது
இந்த இயக்கம். மானிட சமூகத்தினி
ன்றும் ஒழுக்கமற்ற, நீதியற்ற துன்
மார்க்கச்செயல்களை ஒழித்து நல்வழி
கடைப்பிடித்து சமதர்ம இன்பம்
காண வேண்டுமென்பதுதான் சுய
மரியாதையின் கொள்கை.

நாள்தோறும் பார்ப்பன மதா
சாரமென்னும் பேய் அதிகரித்துக்
கொண்டே வருவதில் தமிழ் மக்
களின் செல்வத்தைக் கொண்டே
அது அபிவிருத்தி யடைகிறது.
அம்மதப்பிசாசை நிலைநாட்ட பல
கோவில்களும் கட்டப்பட்டு வருகின்
றன. இதத்கைய பிசாசின் கொடு
மையான அதிகாரத்தினின்று நம்
மக்கள் விடுதலையடைய பிராமணரல்
லாதார் இயக்கம், ஜஸ்டிஸ் கக்ஷி, சுய
மரியாதை இயக்கம் முதலியவைகளை
அளவுகடந்த கஷ்ட நஷ்டங்களுக்
கிடையில் உண்டாக்கப்பட்டன.
நாளடைவில் நமதியக்கங்களினால்
அநேகவிதமான நன்மைகள் மக்கள்
அடைந்திருக்கும் காரணமென்ன
வென்றால் இதுகாறும் நம்வாழ்க்
கையை மாய்ந்து வந்த பார்ப்பன
விஷக்கிருமிகளுக்கு நமதியக்கங்
களில் சிறிதும் இடம்கொடாமை
பற்றியே. இப்படியிருக்கும் நிலை
யில் நம்மவரில் பெரியோர் சிலர்
மனதிளக்கங்கொண்டு நமதியக்கங்
களில் பார்ப்பனர்களும் கலத்தல்
வேண்டுமென்று சிறிதும் கூசாமல்
வெளியிடுவதைக்கேட்க மிகவும்
கவலைக்கிடங்கொடுக்கிறது. இயக்
கத்தின் அடிப்படையான கொள்கை
களை மாறுதல் செய்ய நினைப்பதைக்
காட்டிலும் நமதியக்கங்களுக்கு வேறு
தீங்குகள் கெடுதலெனச் சொல்ல

முடியாது.

சகோதர சகோதரிகளே! பார்ப்பனீயமதமென்னும் கொடிய நோயினின்று நம் திராவிட மக்கள் மீண்டாலன்றி உண்மை வாழ்க்கை நடத்துதல் கிடைத்தற்கரியதாகும். நம்மக்கள் வாழ்வைப்புண்படுத்திய பார்ப்பன மதக்கொடுமை நீருதவரையில் தாய்நாட்டிற்குப்பூரணச் சுதந்திரம் கிடைத்தாலும், பார்வைக்கு மாத்திரம் அழகாய்த்தோன்றி அகத்தில் அழுகியிருக்கும் கனியின் கதியே யாகும். வீரமும் தீரமுமுடையவர் களடயக் கூடிய சுதந்திரத்தை அடிமைத்தன்மையையும் அழிவையும் பரவச்செய்யும் மதாசாரத்தைக்கைப்பிடித்தா அடையமுடியுமென்று நி ..க்கிறீர்கள்.

தக்க இன்ன. நகாதன இன்னவென்று ஒக்கஉன்னலராயின் உயர்ந்துள்ள மக்களும் விலங்கே. ஆதலின் அறிவையும், ஆராய்ச்சியின். உணர்வையும் கைப்பிடித்து மண்ணுலகத்து மானிடன் தன்னைக்கட்டிய தளையெலாம் சிதறும்படி செய்திடுக. நீங்கள் சுயமரியாதை இன்பம் நுகர்க்கும் பெறும் பேறு பெ..திருக்கிறீர்கள். சுயமரியாதை ஒளிவீசி எழுங்கள். மதப்பேய் பறந்தோட சுயமரியாதையென்னும் கதிரொளி பரப்பி எழுமின் விழுமின்! கருதிய கருமம் கைக்கூடும் வரை உழைமின்! உலகில் உண்மைபெருகவும், சுயமரியாதை செழிக்கவும், மன்னுர்குடி ஓங்கவும், திராவிட மக்கள் நல்வாழ் வெய்தவும் சுயமரியாதையென்னும் கதிரொளி பரப்பி எழுமின்! விழுமின்! கருதிய கருமம் கைக்கூடும் வரை! உழைமின்.

சகோதரி சகோதரர்களே! இதுகாறும் என் புன்மொழியைப்பொறுமையுடன் செவிமடுத்த உங்கள் பெருந்தகைமையைக் குறித்து வணக்கம் செய்கிறேன். இதுபோன்ற மகத்தான மகாநாடுகள் இங்கு கூட்டப்பட்டு அதன் இன்ப வாழ்க்கையில் கலந்துழைக்க சந்தர்ப்பங்கள் பல தந்தருளுவீர்களென்று நிச்சய எண்ணத்தில் மகிழ்வெய்தி இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டைத் திறந்து வைக்கிறேன்.

திருச்செங்கோடு யூனியன் பஞ்சாயத்து தலைவர் தேர்தல்

ஷை பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் 21-6-32 வெள்ளிக்கிழமை சங்ககிரி தாலூக்கா போர்டு தலைவர் உயர் திரு என். செங்கோட்டு வேலக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. துவக்கத்தில் 15 அங்கத்தினர்களும் ராஜ விசுவாசப் பிரமாணம் செய்தனர். தலைவர் ஸ்தானத்திற்கு, உயர் திரு ஆர். கே. பால் அவர்களை, திருவாளர்கள் சி. மு. நல்லையா கவுண்டரும், அர்த்தநாரி முதலியாரும்முறையே பிரரேபித்தும், ஆமோதித்தும் நின்றனர். எதிர்கட்சியின் சார்பாக, திரு டி. எஸ். வெங்கிட்டரமணய்யரவர்களை, திருவாளர்கள் அப்பாவு கவுண்டரும், பொன்னப்பச்செட்டியாரும் முறையே பிரேரேபித்தும், ஆமோதித்தும் நின்றனர். திரு வெங்கிட்டரமணய்யர், தான் தலைவர் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை யென வாபீஸ் வாங்கிக் கொண்டார். பின்னர் உயர் திரு ஆர். கே. பால் அவர்கள் ஏகமனதாய் பிரசிடெண்டு ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(ஒரு நிருபர்)

கோவைசுயமரியாதை வாலிபசங்கம்.

ஷை சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் 26-6-32 ந்தேதி ஞாயற்றுக்கிழமை சங்கத்தலைவர் தோழர் ஏ. ஆர். சிவானந்தம்அவர்கள் தலைமையில் கூடியது. அதுசமயம் கோவை நகராக்ஷிக்கழகத்துணை தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர். கே. வெங்கிடாசலம் அவர்களைப் பாராட்டியும், கோவைப்பார்ப்பனரல்லாத வாலிபர்சங்க உறுப்பினரான தோழர். எம். பரமேஸ்வரன் அவர்கள் கோவை நகராக்ஷிக்கழக உறுப்பினராகப் . போட்டியின்றி தேர்ந்தெடுக் கப்பட்டிருப்பதைப் பாராட்டியும், கோவை விவசாயக்கல்லூரிமாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் கமிட்டியார் தேர்ந்தெடுக்கும் 48 மாணவர்களில் பார்ப்பனரில் 28 பேரையும், பார்ப்னரல்லாதாரில் 18 பேரையும், முஸ்லீம்களில் 3 பேரையும், கிறிஸ்துவர்களில் 1 பேரையும்தேர்ந்தெடுத்த அரசாங்கத்தின் செயலையும் கமிட்டி அங்கத்தினர்களின் மனப்பான்மையையும், கண்டித்தும் தீர்மானங்கள் நிறை வேறியபின் சங்கஆண்டுவிழாவிற்கு ஒருசப்கமிட்டிநியமிக்கக் கூட்டம்கலைந்தது.

(ஒரு நிருபர்)

கொலை! கொலை!!

ஆட்டிறைச்சி தின்னும் பார்ப்பனர்.

திருவையாற்றில் யாகம்.

தென்னிந்திய வைதீகர்களுக்குஓர் மூலஸ்தானமாக விளங்கும் திருவையாற்றில் 3-7-32ல் ஓர் யாகம் நடைபெற்றது. கருப்பு ஆடுஒன்றைக்குளிப்பாட்டி, அக்கினிகுண்டத்தின் முன்பு நிறுத்தி, அதன் வாயையும், கால்களையும் கட்டி, மந்திர கோஷங்கள் செய்து ஆட்டைக்கொன்று, ஹோமகுண்டத்தில் போட்டு, நெய் ஊற்றி மந்திரங்கள் பாடிக்கொண்டே, ஆட்டிறைச்சியை பக்குவப்படுத்தி கூடியிருந்த பிராமண வைதீகர்களனைவரும் 'பிரசாத' த்தை சாப்பிட்டார்கள். வருஷா வருஷம் இவ்வித யாகம் நடத்தி வரும் ஸ்ரீ. யக்ஞேஸ்வர தீட்சதர் திருவையாறு வைதீகர்களிடம் யாகத்திற்காகப் பணவசூல் செய்து யாகத்தை நடத்திவந்தார்.

காயல்பட்டணப் பஞ்சாயத் போர்டு தேர்தல்.

16-6-32 ல் நடைபெற்ற காயல் பட்டணம் பஞ்சாயத்போர்ட் தேர்தலில் ஆதிதிராவிடர் களுக்கென ஒதுக்கப்பட்ட ஸ்தானமொன்றிற்கு திரு. கந்தன் என்பவர் போட்டியன்னியில் தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்தபோர்டில் ஆதிதிராவிட அங்கத்தினர் ஸ்தானம்வகிப்பது இதுவே முதல்தடவை.

(ஒருநிருபர்)

பிரிவுஉபசாரம்.

ஈரோடு மகாஜனஹைஸ்கூலில் உதவி ஆசிரியராயிருந்த திரு பாண்டுரங்கம் பி. ஏ. எல். டி. அவர்கள், காங்கயம் போர்டு ஸ்கூல்தலைமை உபாத்தியாயராக மாற்றப்பட்டமையால் கடந்த 5-7-32 தேதி ஷையாருக்கு ஹைஸ்கூல் மாணவர்களால் ஒருபிரிவுபசாரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அன்றுமாலை ஒருதேனீர்விருந்தும்நடைபெற்றது.

(ஒரு நிருபர்)

கமுதி பஞ்சாயத்து போர்டு தேர்தல்.

கமுதிபஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்டு எலக்ஷனுக்காக 20-6-32ல் ஷை ஆபீஸ் மேல்மாடியில் இராமநாதபுரம் தாலுகாபோர்டு பிரஸிடெண்டு ராவ்சாகிப் ராஜம்நாயுடுகாரு அக்கிராசனத்தில் மீட்டிங் நடந்தது. அச்சமயம் 12 மெம்பர்வரை வந்திருந்தனர்

இராஜ விசுவாசப்பிரமாணம்முடிந்தபின் வி. கருப்பையாசேர்வையவர்கள், ஏ. மகாலிங்கமூர்த்தி நாடாரவர்களை பிரஸிடெண்டாக இருக்கும்படிபிரேரேபணைசெய்ய ஆர். அருணாசலநாடார் ஆமோதித்தார். வி. எஸ். எஸ். மைதீன்கனி அம்பலம் ஆர். முத்து சேர்வையவர்களை பிரஸிடெண்டாக இருக்கும்படி பிரேரேபணை செய்யகாதர் முசாபர் அம்பலம் ஆமோதித்தார். ஓட் எடுக்கப்பட்டதில் ஏ. மகாலிங்க மூர்த்தி நாடாரவர்களுக்கு ஏழு வோட்டுகளும் ஆர். முத்து சேர்வையவர்களுக்கு மூன்றுவோட்டுகளும் கிடைக்கப்பெற்று ஏ. மகாலிங்கமூர்த்தி நாடார் அவர்கள் பிரஸிடெண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆதலால் தாலுகா போர்டு பிரஸிடெண்டவர்கள் ஷையாரிடம் சார்ஜ்ஒப்புவித்துச் சென்றார்கள். அதன்பின் ஆர். அருணாசல நாடாரவர்களால் எல். கே. கோகாமாக்ஷிசெட்டிகாருவை வைஸ்பிரஸிடெண்டாக இருக்கும்படி பிரேரேபணை செய்யப்பட்டு ஏகமனதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார். பின்வந்த ஞேபசாரம் கூறிச்சபை இனிது கலைந்தது.

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத தீமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி; ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான சர்டிபிகேட்டுகள் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி. S. I.

ROJA MUTHIAH

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காணும், அவர்களும் செட்டியார் வீட்டுக் கணக்கு வேலைக்கும், குமாஸ்தா வேலைக்கும், குட்டிக்கரணம் போடத்தான் செய்கிறார்கள். வேதத்தில் பிராமணர்கள் தான் படிக்கலாமென்று சொல்லியிருக்கிறது. என்றால் ஞானேந்திரியங்களை கர்மேந்திரியங்களை வென்று மனதை அடக்கி உலக ஆசையை விட்டு நல்லொழுக்க சீலராய் தவசு செய்கிறவர்களை யல்லவோ வேதத்தில் பிராமணனென்று சொல்லியிருக்கிறதே யல்லாமல் நாட்டுக்கோட்டை நகரத்தைச் சேர்ந்த எல்லாத் தொழில்களையும் செய்கிறவர்களை பிராமணப் பிள்ளைகளென்று சொல்ல வில்லையே. கூலிக்கு வித்தை சொல்லுகிறவன், அன்னத்தை விற்பவன், கூலிவாங்கி தேவ பூசை செய்கிறவன், பலதரம் தானம் வாங்கினவன், தானம் வாங்கிப் பொருளிருப்பு வைத்திருப்பவன், மிலேச்ச பாஷை படித்தவன், வேதம் படிக்காதவன் இவர்களெல்லாம் பிராமணர்களாக மாட்டார்களென்று வேதம் சொல்லுகிறது. இந்த வேதப் பிரகாரம் உங்கள் கலாசாலையிலும் சிதம்பரத்திலும் பிராமணப் பையன்களிருக்க வேதத்திலிடமில்லையே.

ஜன்மனா ஜாயதே சூத்ர;
ஸமஸ்காரத் த்விஜ உச்யதே.
வித்யயா யாதி விப்ரத்வம்
ப்ரஹ்ம ஜானாதி ப்ராஹ்மண.

என்ற சுலோகப்படி வித்யா யாதி விப்ரதவம் வித்தையினால் விப்ர தன்மையை யடைகிறான். அதற்குப்பின் ப்ரஹ்ம ஜானாதி ப்ராஹ்மண பிர்மத்தை அறிந்து பிராமணனுமாகின்றான் என்றபடி வித்தையை எல்லாரும் அடையட்டும், பிராமணர்களாகிறவர்களாகட்டும், வந்த நஷ்டமென்ன? அதனால் நஷ்டம் வந்து அழிந்து போகும் காரியங்களென்ன? பஞ்ச பூதத்தில் ஏதாவதொன்று கோபித்துக் கொண்டு உலகத்தையே அழித்து விடுமா? இதில் கடவுளுக்குத் தான் நஷ்டமுண்டா? வேதம் அழுகி ஊசி கெட்டே போகுமா? அல்லது இந்து மதம் இருண்டே போகுமா?

வேதத்தைக் கடவுள் உண்டு பண்ணி, ஒருஜாதியாரிடம்கொடுத்து பார்ப்பாரப் பிள்ளைகளாகிய உங்கள் பிள்ளைகள் மட்டும் படிக்க வேண்டுமென்று சொல்லியிருந்தால் அதுகடவுள் தன்மைக்கு விரோதமல்லவோ? நீங்கள் தான் அதை நம்புகிறீர்களா? என்னமோ வேதத்தில் சொல்லியிருக்கிறது பெரியவாள் வார்த்தை என்று பார்ப்பார் சொல்லுவதை ஜனநாயகதத்துவத்தை விரும்பிப் புதிய சீர்திருத்தத்தில் கலந்து கொள்ள ஆசைப்படும் நீங்கள் நம்புவதெப்படி? வேதத்தைத் சொன்னது ரிஷிகள், நாங்கள் அந்த வம்சம் அதனால் எங்கள் பிள்ளைகளே படிக்க வேண்டுமென்று சொன்னாலும் அதுவும் சரியல்ல. பல ஜாதியிலிருந்த ரிஷிகள் பிறந்தார்கள், அதுவுமல்லாமல் ரிச்யசிருங்கர் மானிடமும் கௌசிகர் குசத்திலிருந்தும், ஜம்புகர் நரியிடமிருந்தும், வால்மீகர் பாம்பினிடமிருந்தும் கௌதமர் மானிடமிருந்தும் அகஸ்தியர் கலசத்திலிருந்தும் உதித்தார்கள். இவர்களும் வேதஸ்மிருதிகர்த்தாக்களாவார்கள் ஆதலால் இந்த வார்சு பாத்தியதைகளை நினைக்கையில் முயல், மான், நரி, பாம்பு, கலசம் முதலியவைகளின் பிள்ளைகளுக்குத்தான் வேதம் சொந்தம்.

ஏதேனும் ஒரு ஜாதியாருக்குப் பெரிய அனுபூதி உண்டாயின் அது பிறர்க்கும் கொடுக்கத்தக்கது, லோபத்தினால் தனக்கே நஷ்டமுண்டாகும், ஸைன்சும் மனுஷ்ய உரிமைகளும் ஐரோப்பாவின் அனுபவப் பயன். இந்த செல்வத்தை நமக்குக் கொடுக்கும் பொருட்டாக இங்கிலாந்தை தெய்வம் நம்முடைய கரைகளில் கொண்டுவந்து சேர்த்தது. இந்த கடமையை நிறைவேற்றும்படி அவர்களை வற்புறுத்துவது நம்முடைய கடமையென்று சொல்லவந்த ஜஸ்டிஸ்கட்சியின் காரியதரிசி அல்லவோ தாங்கள். அப்படியிருக்க நம்மவர்களை நாமேயிகழ்ந்து அவர்களை உலகம் இகழ வைத்தால் அவ்விகழ்ச்சி சர்வஜன சந்தையில் இருமாப்புடன் மனிதனாக விளங்கும் மனிதர்களினூடே நம்மை மனிதனாக மதிப்பதில்லையென்பது அனுயோகமல்லவா?

உலகமெல்லாம் ஜனநாயகத்வமென்னும் சுயராஜ்யத்தை விரும்புகிறது விரும்பியபடியே முயற்சிக்கிறது. அனுபவிக்கிறது, அதுபோல நாமும் சுயராஜ்யத்தை விரும்புகிறோம். சுயராஜ்யத்தை விரும்புவதிலும் முயற்சிப்பதிலும் நம்மை யாரும் குற்றம் சொல்லுவதில்லை. எப்படி அனுபவிப்பீர்கள் என்கிற கேள்வியைக் கேட்கிறார்கள். அதற்கு உள்ளது உள்ளபடி பதில் சொல்ல இனியும் முடியவில்லை அறிவு மனிதருக்கெல்லாம் பொதுவென்பதை உலகம் முழுதும் ஒத்துக்கொள்ளுகிறது. நமது மாகாணத்தில் மட்டும் ஒப்புக்கொள்ளுவதில்லை அதற்கு மீனாட்சி கலாசாலையே சாக்ஷியாகவிருக்கிறது. ராஜ்ய ஆதர்சங்களாகிய வானத்தில் ஏறிப்பறக்க நிச்சயித்திருக்கும் நாம் மற்றபடி சாதாரண ஜனவாழ்க்கையில் கூட சாதாரண புத்தியைக் கூடசெலுத்துவதில்லை. தர்ம மகிமையாலேதான் ஜாதி மகிமையுண்டாகிறது. ஆங்கிலேயர்களில் அநேகர் நியாயம், உண்மை, விடுதலை என்ற ஆதர்சங்களை யதார்த்தமாக நம்புகிறார்கள். அவர்களுடைய ஜாதீயஜீவன இலக்கியம், சாஸ்திரம், கலை, ஊர்குடித்தனம், மதம் இவைகள் முழுவெள்ளமாகப் பாய்ந்து செல்லுகிறது. மனிதசரித்திரத்தைப் புதுமாதிரியாக வாசிக்கப்பழகுகிறார்கள். மனுஷியஜாதியை அவமானப்படுத்தி அதற்கெதிரே பொய்யான கர்வத்தின் குருக்கள் கட்டுப்பாட்டை அவர்கள் நிலைநிறுத்துவதில்லை.

சுதந்திரத்தை விரும்புகிறவர்கள் சுதந்தரத்தைக்கொடுக்கத்தயாராகவிருக்கவேண்டும் சுதந்திரத்தைக் கொடுக்கத்தயாராகவில்லாதவர்கள் சுதந்தரத்தை அடைவதற்கு அருகரல்லர். நமது ஆங்கிலேய கலாசாலைகளில் ஆங்கிலோ இந்தியர்களின் பிள்ளைகள் மட்டும் சைன்ஸ் படிக்கலாம், மற்ற பிள்ளைகள் சைன்ஸ்படிக்கப்படாது. அவர்களை அந்த வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படாது என்கிற ஏற்பாடிருந்தால் நீங்கள் என்ன சொல்லுவீர்கள். நியாயமென்றும் நீதியென்றும் அங்கீகரிப்பீர்களா? எங்கள் கிறிஸ்துவவேதத்தில் சொல்லியிருக்கிறது, எங்கள் குருக்கள் ஓதிக்கொண்டிருக்கிறார்கள் ஆங்கிலோ இந்தியர்கள் எங்கள் வம்சத்தவர்கள் என்கிற பதிலை அவர்கள், சொன்னாலும் அதிகாரத்திற்குப் பயந்து; ஆசைக்கு அடிமைப்பட்டு இருக்கும் மனிதன்கூட நியாயசபையில் ஒத்துக்கொள்ளுவானா? அறிவின் சாஸ்திரங்களைப் படிக்கப்படாதென்கிற தடையை மனித சமூகம் ஒத்துக்கொள்ளுமா? அறிவின் சாஸ்திரங்களை படிக்கப்படாதென்னும் ஏற்பாட்டால் மனித அறிவைத்தடுத்து வைத்திருக்கும் வழக்கம், தெய்வம், ஆசாரி, குரு நிறைந்த நமது நாட்டைத்தவிர வேர் எந்த நாட்டிலாவதுண்டா? அந்தத்தடைக்குக் காரணமாகச்சொல்லப்படும் கடவுளுக்கு கால், கை, வாய் முளைத்திருந்தாலும் நியாதிபதியென்றுசொல்லமுடியுமா? வரப்போகும் ஜனநாயகப் பொருப்பின் அதிகாரத்தின் ஒரு பாகத்திற்கு ஆசைப்படும் தங்களுக்கு இதை ஆலோசித்துப்பார்க்க நேரமோ சமயமோ, ஆலோசனையோ அறிவின் ஆற்றலோ இல்லையென்று வந்தால், வரப்போகும் சீர்திருத்தத்திலுள்ள ஜனநாயகதத்துவ உண்மையை உணர்ந்தவர்களென்று உங்களை உலகம் சொல்லுமா? உலகப்பொதுவிதியை உல்லங்கனம் செய்கிறவர்களை உலகம் இகழாதோ? என்கிற எல்லா விஷயமும் தெரிந்ததங்களுக்கு இதைவிட விரிவாகத்தெரியப்படுத்துவதொன்றுமில்லை. எல்லாம் ஆலோசித்து உண்மை, நியாயம் என்பவைகளைக்கொண்டு இவ்விண்ணப்பத்திற்குத்தீர்ப்புக்கூறவேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தேவை.

தஞ்சை, நாகை, திருவாரூர் தவிர மற்ற ஒவ்வோர் இடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை. மாதச்சம்பளம் ரூ 25. கொஞ்சம் படிப்பிருந்தால் போதுமானது. விபரத்திற்குஉடனே 0—1—3 ஸ்டாம்புடன் எழுதவும், சமயத்தை கைவிடாதீர்.

டி. எஸ். நாராயணசாமி.
வடக்குதெருவு.
திருவள்ளூர்.

உங்கள்
கண்ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "சமத்எண்ணெயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனாம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.

ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 60 Pills Rs 8 only Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To:

SAILASRAM (K)
Chandanpur (Khulna)
E. B. R.

Read the

"SUPERSTITION OF KHADI"

A Discussion

By

S. Ramanathan

Pattabhi Sitharamyya

& N. S. Varadachari

in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—

Manager "Kudi Arasu" Erode.

காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி வட்டமேசை மகாநாட்டிற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜ்ய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மற்றும் முக்கியமான பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜ்ய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மற்றும் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0

தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—

மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்பவரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,

221, தங்கசாலை வீதி,

சென்னை

"குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

"ரிவோல்ட்."

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்

"குடி அரசு"

ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,

இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

"பசிக்கும் வயிற்றிற்கு ஒரு கவள சாதம் கொடுக்க சக்தியற்ற சாமிகளும், சாஸ்திரங்களும் இந்நாட்டுக்கு வேண்டியதில்லை"

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குகிறது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோதயா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருந்தா மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.
இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.
இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சாத்திரப் புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0 2—0

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சித்தாராமைய்யாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.
இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.